# கல்விமாணி

## கல்விமாணிப் பட்ட கற்கை நெறி

2002/2004

தேசிய கல்வி நிறுவக
பிராந்திய நிலையம்
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(R8)
17073

# கல்விமாணி

BAITHUL HIKMAH
Book No. 1352/EDU (2)
U.L. Aliyar, Sammanthurai-6




*வெளியீடு:*

மாணவர்பேரவை

கல்விமாணிப் பட்ட கற்கை நெறி (2002-2004)

தேசிய கல்வி நிறுவகம்

பிராந்திய நிலையம்

கல்முனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **Title** | *Kalvimani* |
| **Language** | *Tamil* |
| **Editor** | *A.C.Niyas.* |
| **No of Pages** | **x ix +** 81 |
| **Type setting** | *Moulavi.M.Abdullah* |
| **Cover design** | *A.M.Rasmy* |
| **Printing** | *New Metrow Printers,*<br>*197,Sheriff Hajiyar Road,*<br>*Addalaichenai.* |
| **Publication** | *Student Council,*<br>*BEd.Course(2002/2004)Batch,*<br>*National Institute of Education,*<br>*Regional Center,*<br>*Kalmunai.* |


BAITHUL HIKMA
Book No.
U.L. Aliyar Sammanthurai

இச்சஞ்சிகையிலுள்ள ஆக்கங்கள்
அனைத்திற்கும் அவற்றை எழுதியவர்களே
பொறுப்புடையவர்கள்.
-பத்திராதிபர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR SENIOR LECTURER



**AlHaj U.L. Aliyar**

**M.A.(Ed.), B.A. (Cey.), Dip. in Ed. (Merit) Dip. in Eng., Dip. in Journ, (Distinction)**
**Dip. in EMIS (Sydney), IIEP / World Bank Summer School (Paris)**
**Cert. Microsoft Windows (SLIDA) , First in Laws., Cert. in Law for Adm. (SLIDA)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACCESSION NO:- 17073
CLASS NO :-

# நிலைய கீதம்

வாழ்க! வாழ்க! கல்விமாணிப்
பாடநெறி வாழ்கவே!
வளமும் பெருக நெடிது உயர
வண்மை பெற்று வாழ்கவே!
வாழ்கவே! வாழ்கவே! வாழ்கவே!

கடலும் வயலும் சூழ்ந்து விளங்கும்
கல்முனை மா நகரிலே
கல்விமாணிப் பட்ட நெறி
கற்கும் வாய்ப்பு வந்ததே
கல்விமாணிப் பட்ட நெறி
கற்கும் வாய்ப்பு வந்ததே
வாழ்கவே! வாழ்கவே! வாழ்கவே!

விதையினுள்ளே ஒழிந்திருக்கும்
விருட்சம் போன்று மாணவர்
மனதின் உள்ளே மறைந்திருக்கும்
மகிமை மிகு ஆற்றலை
ஏணியாக தோணியாக இலங்கியுயர்த்தும் ஆசிரியர்
நானிலத்தில் உயர்ந்திடவே நல்ல நெறி வாய்த்ததே
வாழ்கவே! வாழ்கவே! வாழ்கவே!

தேறி நாங்கள் உயர்ந்திடவே
தேசிய கல்வி நிறுவகம்
ஆசியுடன் உவந்தளித்த அரிய நெறி தானிதை
வாசியுடன் கற்றுணர்ந்து மாணவரை உயர்த்துவோம்
வகுப்பறையில் எம் பணியை
வாண்மையுடன் ஆற்றுவோம்
வாழ்கவே! வாழ்கவே!! வாழ்கவே!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACCESSION NO:-
CLASS NO:-

# மாணவர் பேரவை

*தலைவர்*

ஜனாப்.எம்.எச்.நவாஸ்

*உப தலைவர்*

திரு.பி.ஜெகநாதன்

*செயலாளர்*

திரு.கே.தயானந்தன்

*உப செயலாளர்*

திருமதி.எஸ்.நாதிறா கமால்தீன்

*பொருளாளர்*

ஜனாப்.ஐ.எம்.பாஹிம்

*உறுப்பினர்கள்*

ஜனாப்.எம்.எல்.எம்.றியாழ்

திருமதி.கலாவதி தயாசீலன்

திருமதி.புஸ்பராணி திருநாவுக்கரசு

ஜனாப்.ஏ.ஏ.றமீஸ்

திரு.எஸ்.ரீ.பாலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL BOARD

PATRON

Al-Haj.V.L.Aliyar.(Senior Lecturer)

EDITOR

Mr.A.C.Niyas.

PRESIDENT

Mr.M.H. Nawas.

SECRETARY

Mr.A.A.Ramees.

TREASURER

Mr.I.M.Fahim.

COMMITTEE MEMBERS

Mr.T.Poovendran
Mr.K.Thayananthan
Mr.P.Sivepirakasam
Mr.M.M.M.Riyal
Mr.K.Thirunamam
Mrs.Subosana vivekananderaja



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் விருட்சமாய்க் காய்த்துக்
கனி வழங்கும் கல்விமாணிகளின் வாழ்வுக்கு

## கல்வி வழி காட்டிய
## சிரேஷ்ட விரிவுரையாளரே!

திருமதி நபீஸா சிர்ருல் கதீர் (விடுகை வருடம்)

ஆம் ! கம்பீரத் தோற்றமும்
கள்ளங் கபடமற்ற உள்ளமும்
நேரத்துக் கேற்ற சுபாவமும்
நீதியில் நேர்மையுங் கொண்ட
அதி உத்தம வள்ளலே ! என்றும்
அல்லாஹ்வின் ஆசி பெற்று
இனிதே வாழ்ந்திட
இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்

சம்மாந்துறை மண்ணிலே உதித்து
அம் மண் வாழ் மக்களுக் கெல்லாம்
கல்வி யூட்டிய கல்வி முதுமாணி யெனும்
பெயர் பெற்ற பெரியவரே
இன்னுமின்னுங் கல்வி மாணிகளை
இக்கல்முனை நிலையத்தால்
பெருக்கிடும் வல்லமை பெற
வாழ்த்துகிறேன் வாழியவே!

இத்தனை ஆண்டுகள் சென்றாலும்
இளைய தலைமுறையினருக்கு
நவீன கால சவால்களுக்கு
நவீன முறையில் முகங் கொடுக்க
கல்விச் சிந்தனைகளை ஊட்டிய
கலா பூசணம் அல்ஹாஜ் யூ.எல். அலியார்
சர்வ தேசத்தில் மின்னிடும் தாரகை - ஆக
வாழ்த்துகிறேன் வாழிய! வாழியவே!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கல்வி நிறுவகத்தின்
கல்முனைப் பிராந்திய
கல்வி மாணிப் பட்ட நெறிக் கற்கை நிலையத்தின்
இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான
கலாபூஷணம் அல்ஹாஜ் யூ.எல். அலியார்,SLEAS -I
அவர்களின்

# நிலைய அறிக்கையும் வாழ்த்துரையும்

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்முனைப் பிராந்திய நிலையத்தில் கடந்த மூன்றாண்டு காலமாகக் கல்விமாணிப் பட்ட கற்கை நெறியைப் பயின்ற ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவர்களின் விடுகை நிகழ்வின் ஓர் அம்சமாக வெளியிடப்படும் கல்விமாணி மலருக்கு இவ்விசேட அறிக்கையையும், ஆசியையும் வழங்குவதில் மன நிறைவு அடைகின்றேன்.

ஆசிரியரின் வாண்மை விருத்தியையும் தொழில்சார் முன்னேற்றத்தையும் அடிப்படை நோக்கங்களாகக் கொண்ட கல்விமாணிப் பட்டக் கற்கை நெறி ஆசிரிய சமூகத்துக்கு ஓர் வரப்பிரசாதமாகும். ஆசிரியர் தம்மைக் காலத்துக்கேற்றவாறு மாற்றிக் கொள்வது – உயர்த்திக்கொள்வது இன்றியமையாததாகும். உலகெங்கும் இந்த விடயத்துக்கு அதீத அழுத்தம் கொடுக்கப்படுகிறது. கல்வித் துறையில் கணத்துக்குக் கணம் கண்டறியப்படும் ஆய்வு முடிவுகளும் புதுமைகளும் (Innovations) இன்று அத்துறையை வளமாக்கி வருகின்றன. அறிவுத் துறையில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி ஒரு புறமும், முறையியலில் (Pedagogical changes) ஏற்பட்டு வரும் தொழில் நுட்ப மாற்றங்கள் மறுபுறமாகவும் ஆசிரியப் பணியை வளப்படுத்தி வருகின்றன. ஆய்வு, அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் முன்வைக்கப்படும் புதுமைகளுக்கேற்ப ஆசிரியர்களும் தாம் மாற்றங்களை விளங்கிக்கொள்ளவும் அவற்றில் தேர்ச்சி பெறவும் தம்மை இயைபாக்கிக் கொள்வது மிக மிக அத்தியாவசியமாகும். இவற்றை உரிய விதத்தில் வளமாக்கிக் கொள்வதற்குக் கல்வித் துறை சார்ந்தோரின் மனப்பாங்கு இசைவாக அமைவது இதற்கு அடிப்படையானதாகும். இதனூடே நேர்மை, தியாகம், அர்ப்பணிப்பு, தன்னம்பிக்கை போன்ற உயர் விழுமியங்கள் பிரகாசிக்க வேண்டும். பண்டைய *குருகுல* மரபில் இவை இயல்பாகவே அமைந்திருந்தன.

வாணாள் முழுவதுங் கல்வி (Life Long Education) என்பது சர்வதேசக் கல்விக் கோட்பாடுகளுள் ஒன்று. ஆசிரிய வாண்மை விருத்தியைப் பொறுத்தவரையில் இக்கோட்பாடு இன்று தொடருறு கல்வி (Continuing Education) எனவும் மீள் பயிற்சி (Re -Training) எனவும் பரிணமித்துள்ளது. ஆசிரியரும் ஏனைய கல்வித்துறைசார் ஆளணியினரும் இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தித் தம்மை உயர்த்திக் கொள்வதன் மூலமே பெருகி வரும் அறிவுப்பிரவாகத்திற்கு ஈடு கொடுக்கக்கூடிய மாணவர் பரம்பரையை உருவாக்கமுடியும். இது காலத்தின் நிர்ப்பந்தமுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் பன்னாடுகளிலும் ஆசிரியர் வாண்மை விருத்திக்கான பல்வேறு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எமது நாட்டிலும் உயர் கல்வி நிறுவனங்களால் நிறுவனப் பயிற்சியாகவோ தொலைக்கல்வி முறையிலோ – முழு நேரமாகவோ பகுதி நேரமாகவோ- வார இறுதி நாட்களிலோ கல்வித் துறையில் பல்வேறு பயிற்சிகளும் கல்வி நெறிகளும் வழங்கப்படுகின்றன. கல்வித் துறைசார் ஆளணியினரின் வாண்மை விருத்திக்காக மஹரகம தேசிய கல்வி நிறுவகம் பல்வேறு உயர் நெறிகளை வழங்கி வருகின்றது. கல்வி மாணிப் பட்டக் கற்கை நெறி வார இறுதி நாட்களில் பயிலக்கூடியதாக வடிவமைக்கப்பட்டதாகும். தமிழ் மொழி மூலம் மஹறகம தேசிய கல்வி நிறுவகத்தில் மட்டும் நடைபெற்று வந்த இந்த நெறி தொலைத்தூர மாணவர்களின் நலன் கருதி 1999ம் ஆண்டிலிருந்து 3 பிரதேச நிலையங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டிலிருந்து மேலும் 3 நிலையங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. இது மேலும் 2004ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் 12 நிலையங்களாக வளர்ச்சிபெற்றது. இந்த வளர்ச்சிக்கு முன்னாள் தே.க.நி. பிரதம செயற்றிட்ட அதிகாரி திருமதி திவ்வியராணி சிதம்பரநாதன் அவர்களின் அர்ப்பணிப்பு அடித்தளமாக அமைந்தது. இந்த அம்மையாரது சேவைகளை வார்த்தைகளால் விபரிப்பதற்கு ஒரு சில பக்கங்கள் போதா.

கல்முனை நிலையம் 2002- 04 - 20 ம் திகதி வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் ஐ.எம். இஸ்ஸதீன் அவர்களின் பங்குபற்றுதலுடனான அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பமானது. ஆரம்பக்கல்வியில் கல்வி மாணிப்பட்ட நெறிக்குத் தெரிவான 60 பேருடன் இது தொடங்கியது. கல்வியியலில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றிருந்ததோடு ஆசிரிய கல்லூரிகளில் விரிவுரையாளராகவும் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் என்பவற்றில் கல்வியியல் டிப்ளோமா நெறிக்கான பகுதி நேர விரிவுரையாளராகவும் 1999/2001 கல்விமாணி அணியினருக்கு கண்டி நிலையத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றிய அனுபவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு கல்முனை நிலையத்தின் இணைப்பாளராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் நான் நியமிக்கப்பட்டேன்.

இன்று நெறியினை நிறைவு செய்து வெளியேறும் மாணவர்களின் கடந்த மூன்று வருடங்களையும் பின்னோக்கிப் பார்க்கையில் இந்நிலையம் பல சவால்களை எதிர்நோக்க நேரிட்டது. அவற்றுள் பிரதானமாகக் குறிப்பிடத் தக்கது நிலையம் எதிர்நோக்கிய இடப்பிரச்சினையாகும். 2004ம் ஆண்டிலிருந்து புதிய பாடத்திட்டத்துக்கமைய புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படன. ஆரம்பக் கல்வி நெறியுடன் இடைநிலை நெறியும் கல்முனை நிலையத்துக்கு வழங்கப்பட்டன. தகுதி பெற்ற 108 பேருடன் இரு நெறிகளுக்குமான வகுப்புக்கள் கல்முனை கிறித்தா இல்ல மண்டபத்தில் 2004- 07- 25 இல் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பிக்கப்பட்டன. அன்றைய தினம் சிரேஷ்ட மாணவர்களால் புதிய மாணவர்கள் மிக நேசத்துடன் வரவேற்கப்பட்டார்கள். பிரதியமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்களின் பங்குபற்றுதலுடன் நிகழ்ந்த இவ்வைபவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தே.க.நிறுவகத்தைச் சேர்ந்த பல அதிகாரிகளுடன் திருமதி தி. சிதம்பரநாதன் அவர்களும் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்கள்.

புதிய மாணவர்களின் வருகையுடன் நிலையத்தில் இடப்பிரச்சினை சவாலாக அமைந்தது. இந்த சந்தர்ப்பத்தில் கல்முனை இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலயத்தின் விருது பெற்ற அதிபர் திருவாளர் என். நாகராஜா அவர்கள் நேசக் கரம் நீட்டினார். அவரது விரிந்த உள்ளம் நாம் எதிர்பார்த்திராத அளவு அவரது கல்லூரியை விசாலமாக்கியது. தே.க.நி. பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் கல்முனை நிலையம் 2004- 08 -01 ஆந் திகதி முதல் இங்கு இயங்கி வருகின்றது.

2004-12-26ம் திகதி இப்பிரதேசம் மாபெரும் அனர்த்தத்தை எதிர்நோக்கியபோது அது நிலைய செயற்பாட்டுக்கும் ஒரு சவாலாக அமைந்தது. சுனாமியின் தாக்கத்துக்குள்ளான பிரதேசங்களில் கல்முனை மிக முக்கியமானது. அனர்த்தத்தினால் வதிவிடமிழந்த ஆயிரக்கணக்கானோர் எமது நிலையத்தில் தஞ்சமடைந்தனர். அகதி முகாமாக இது செயல்படத் தொடங்கியது. கணிசமான அளவு எமது மாணவர்களின் குடும்பங்களும் இநத அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டன. இந்த நிலையில் இறுதிப்பரீட்சையை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்களின் கல்வியை நீண்ட காலத்துக்கு இடைநிறுத்துவது உசிதமல்ல என்பதும் உணரப்பட்டது. மாணவர்களின் கருத்துக்களையேற்று வகுப்புக்களை வேறிடத்தில் தொடர்வதென தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில் 2005- 02- 12 ம் திகதி தொடக்கம் நிலையம் தற்காலிகமாக சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இந்த வகையில் இக்கல்லூரி அதிபர் ஜனாப் பாறூக் அவர்களின் அனுமதியும் எமது விரிவுரையாளர்களின் அர்ப்பணிப்பும் மாணவர் ஒத்துழைப்பும் நன்றிக்குரியதாகும். சுமார் மூன்று மாதங்கள் இந்த சவால் வெற்றி கொள்ளப்பட்டதோடு அகதி முகாம் அகன்றதும் மீண்டும் வகுப்புக்கள் எமது கல்முனை நிலையத்தில் தொடர்ந்தன.

2003 ம் ஆண்டில் எனக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தனிப்பட்ட முறையில் எனக்குச் சவாலாக அமைந்தபோதிலும் அது எனது பிரயாணங்களின் தூரத்தை அதிகரித்து உடலை வருத்தியதே தவிர நிலையத்தின் செயற்பாடுகளிலும் மாணவர் நலனிலும் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பது பலரும் அறிந்ததே. 2002/2004 ஆரம்ப நெறி, 2004/2006 ஆரம்ப நெறி 2004/2006 இடைநிலை நெறி ஆகிய 3 குழுக்களும் சுமார் 150 மாணவர்களைக் கொண்டதாக இந்நிலையம் இயங்கியது. கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் என பதவி நிலையில் வேறுபட்டவர்களாகவும், பல இன, பால், மத, பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்த போதிலும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போன்று மிகப் பாசத்துடன் பழகினார்கள். தமது இன்பியல், துன்பியல் நிகழ்வுகளில் சகலரும் முழுப்பங்கு கொண்டு தம் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். சுருங்கக் கூறின் நிலையத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமூகமான இயக்கத்துக்கு இவர்களின் திறந்த உள்ளமும் அகன்ற பார்வையும் சீரிய நடத்தையும் அடித்தளமாக அமைந்தன எனலாம்.

ஆசிரிய சமூகத்தில் இன்று கல்வி பெறும் தாகம் அதிகரித்து வருகின்றது. எனினும் கணிசமான தொகையினர் தம் துறைசார் உயர்வு பற்றியோ தேர்ச்சி பற்றியோ வாளாவிருப்பது வருந்தத்தக்கது. தமது தேங்கி நிற்கும் துருப்பிடித்த அறிவுடனும் காலாவதியான கற்பித்தல் முறைகளுடனும் தம்மையும் மாணவர்களையும் ஏமாற்றுபவர்களாக இவர்கள் அமைகின்றனர். பணம்பெருக்கும் வேறு முயற்சிகளில் நாட்டம் மிக்கவர்களாக இருப்பதால் புனித பணிக்காக வழங்கப்படும் நேரசூசிக்கு துரோகமிழைப்பவர்களாகவும் உள்ளனர். மாறி வரும் கல்வி மாற்றங்களையோ தகவல் நுட்பங்களையோ பற்றி அக்கறையின்றி இருப்பதோடு தினசரிகளைக் கூட வாசிப்பதில் நாட்டமில்லாதவர்களாக இருப்பது இப்பணிக்குப் பொருத்தமற்றவர்களாக அவர்களை அடையாளப்படுத்தியுள்ளது. இவர்கள் மூலம் நற்பிரசைகளை உருவாக்கும் உயர் பணியை எவ்வாறு சமுதாயம் எதிர்பார்க்க முடியும்?.

இவ்வாறான சமூகக் கட்டமைப்பில் தம்மையும் உயர்த்தி சமூகத்துக்கும் பயன் நல்கவேண்டும் என்ற நன்னோக்கில் ஆர்வத்துடன் கல்விமாணிப் பட்ட கற்கை நெறியில் இணைந்து கொண்ட ஆசிரியர்களும் கல்வித் துறை ஆளணியினரும் மிக மிகப் பாராட்டப்பட வேண்டியவர்கள். இன்று கல்வி மாணிகளாக வெளியேறும் இவர்கள் எமது குருகுலத்தின் முதற் படைப்புக்கள். முன்னோடிகள். மாணவர் கல்வியில் அர்ப்பணிப்புடன் செயல்படும் தியாகிகளாகவும், துறைசார் நிபுணர்களாகவும் சமூகத்தை வழிநடத்தும் முன்மாதிரி கல்வியாளர்களாகவும் இவர்கள் மிளிர வேண்டும் என்பதே எமது அவாவும் நம்பிக்கையுமாகும். எமது நிலையம் கடந்த மூன்று வருட காலமாக வழங்கிய நல்லாசிரியர் பயிற்சி அவர்களுக்கு வழிகாட்டும் என்பது திண்ணம். அவர்களின் எதிர்காலம் மேலும் வளம் பெற எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

யூ.எல். அலியார்
இணைப்பாளரும்
சிரேஷ்ட விரிவுரையாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குக் கிழக்கு மாகாணம்

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

**திருவாளர் ஆர். விசாகலிங்கம்**

அவர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்முனைப் பிராந்திய நிலையத்தில் கல்விமாணிப் பட்டக் கற்கை நெறியினை நிறைவுசெய்த 42 ஆசிரிய மாணவர்களால் வெளியிடப்படும் ''**கல்விமாணி**'' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆசிரியர்கள் தம்மை வாண்மை ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் உயர்த்திக் கொள்வதற்குக் கல்விமாணிப் பட்டநெறி அடித்தளமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேனாடுகளில் ஆசிரிய சேவையில் இணைந்து கொள்வதற்கு இதுவோர் அடிப்படைத் தகைமையாகவே விதிக்கப்பட்டுள்ளது. கல்முனை நிலையத்தின் சிரேஸ்ட விரிவுரையாளராகவும் இணைப்பாளராகவும் பணியாற்றும் **ஜனாப் : யூ.எல். அலியார்** அவர்களின் நெறிப்படுத்தலில் ஆசிரியப் பணிவேண்டி நிற்கும் வாண்மையையும் உயர் விழுமியங்களையும் மாணவர்கள் நிச்சயமாகப் பெற்றிருப்பார்கள் என நம்புகிறேன்.

நெறி நிறைவு விழா சிறக்கவும், நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களின் எதிர்காலப் பணி பயன் நல்கவும் வாழ்வு வளம் பெறவும் வாழ்த்துகிறேன்.

(ஒப்பம்)
ஆர். விசாகலிங்கம்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்குக் கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Project Leader - B.Ed Project National Institue of Education.

*At a time where the National Institute of Education is emerging as the leader of teacher education in Sri Lanka, I am happy and proud of the initiative taken by the Kalmunai regional center of the B. Ed. course in publishing a magazine in collaboration with the student teachers as well as the other outside resource persons. As I have been informed it is not easy to engage in academic endeavors in your area since there are no better institutions and therefore we established the Kalmunai Regional Center with the sole objective of providing you with a sound academic and professional background.*

*I congratulate all who contributed to the success of this venture and hope that you will continue this making it an example to the nation.*

**M.Manel Perera**
Project Leader
B.Ed. Degree Project , NIE.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தேசியக் கல்வி நிறுவகத்தின் கல்வி, தலைமைத்துவ, ஆசிரியர் கல்விப் பீடத்தின் முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரியான*

**திவ்யராணி சிதம்பரநாதன்**

*அவர்கள் மனமுவந்து வழங்கிய*

# ஆசிச் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படும் கல்விமாணிப் பட்டக் கற்கை நெறியின் கல்முனைப் பிராந்திய நிலையத்தின் 2002-2004ஆம் வருட ஆசிரிய மாணவர்களால் வெளியிடப்படும் ''**கல்விமாணி**'' என்ற சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

நாடளாவிய ரீதியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பட்டப்படிப்பு விருத்திக்காக ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கை நெறி இலங்கையின் ஆசிரிய விருத்தி தொடர்பான நிகழ்வுகளுள் முக்கியமானதொன்றாகும். ஓர் ஆசிரியர் கற்பித்தல் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதற்கு முதலில் தன்னை விருத்தி செய்து கொள்ளல் அவசியமாகின்றது. அத்தகைய விருத்தியினூடாக ஆசிரியர் வாண்மையினராக அமைவதற்கு அவர்களின் கல்வித் தகைமையும் தொழிற்றகைமையும் மேம்பட்டுக்கொண்டேயிருத்தல் வேண்டும்.

கல்வியின் பெருமை கற்பதில் மட்டும் அல்ல, தான் பெற்ற அறிவைச் சிறந்த முறையில் மாணவர்களுக்கு வழங்குவதிலும் தங்கியுள்ளது. அந்த வகையில் கற்பித்தல் தொடர்பான பல்வேறு முறைகள், நுணுக்கங்கள், தொழில் நுட்பப் பயன்பாடுகள் போன்றவற்றை அறிந்துகொள்வதும் அவற்றில் பயிற்சி பெறுவதும் ஓர் ஆசிரியருக்கு அவசியமானதொன்றாகும்.

கற்போன் பெறும் பல்வேறு அனுபவங்களினூடாக அவனிடத்தே ஏற்படும் ஒரு நிரந்தர மாற்றமே கற்றல் எனப்படுகின்றது. மாணவர் சிறந்த அனுபவங்களைப் பெறவேண்டுமெனில், ஆசிரியரது கற்பித்தல் முறை பல்வகைப்பட்டதாகவும் பயனுள்ளதாகவும் அனுபவம் பெற வாய்ப்பளிப்பனவாகவும் கற்போனின் உள்ளத்தில் சிந்தனையைத் தூண்டுவனவாகவும் அமைதல் வேண்டும். சிந்தனைகள் தூண்டப்படும் போது மாணவர்களின் ஆராய்வூக்கம் அதிகரிக்கப் பட்டுத் தாமாகவே தேடல் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இன்றைய கல்விமுறை வேண்டிநிற்பது சுயதேடலும் சுயவிருத்தியுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனைப் பிராந்திய நிலையத்தில் கல்விமாணிப் பட்டக் கற்கை நெறியை மேற்கொள்ளும் ஆசிரிய மாணவர்கள் தமது கல்வித் தகைமை, தொழிற்றகைமை ஆகியவற்றை மேம்படுத்தித் தமது கற்றல் பணியை மேலும் திறமையாக ஆற்றவேண்டும். இதற்கான வழிவகைகளை இக்கற்கை நெறி வழங்கி வருகின்றது என்பதில் எதுவித ஐயமுமில்லை. எனினும் கல்வியானது பட்டம் பெறுவதுடன் முற்றுப் பெறுவதில்லை. ஆசிரிய மாணவர்களது சுய தேடலிலும் சுய விருத்தியிலும் தம்மை முற்றுமுழுதாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறான பணியில் நீங்கள் ஈடுபட்டுள்ளீர்கள் என்பதை இச்சஞ்சிகை வெளியீடு பிரதிபலிக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளில் மேலும் தம்மை ஈடுபடுத்தித் தமது அறிவாற்றல்களை மென்மேலும் விருத்தியாக்குவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கவேண்டும் என்று இறைவனது நல்லாசிகளை வேண்டுகிறேன்.

இந்நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக விளங்கும் **ஜனாப் யூ.எல். அலியார்** அவர்களின் அறிவு, தலைமைத்துவம், வழிகாட்டல், விடாமுயற்சி, அர்ப்பணிப்பு என்பவற்றால் இப்பயிற்சி சிறப்பாக நடைபெறுகின்றது. அவர்களுக்கு அயராது ஒத்துழைப்பு வழங்கி இந்நிலையம் இயங்குவதற்கு, இங்கு கடமையாற்றுகின்ற விரிவுரையாளர்களும் தமது பணியைச் செவ்வனே நடாத்தி வருவது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

இச்சஞ்சிகை 2002/2004 ஆம் கல்வியாண்டில் கல்வி பயில்கின்ற ஆசிரிய மாணவர்களால் வெளியிடப்படுகின்றது. அவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ''**கல்விமாணி**'' என்ற சஞ்சிகை கல்விமான்களின் வெளியீடாக எதிர்வரும் காலங்களிலும் வெளிவர வேண்டும். இந்நிலையம் மென்மேலும் ஓங்கி வளரவேண்டும்.

என் இதயம் கனிந்த நல்லாசிகள்!

ஒப்பம்
திவ்யராணி சிதம்பரநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தேசிய கல்வி நிறுவக உதவி செயற்றிட்ட அதிகாரி*

**ஷாஜஹான் சிபான்** *அவர்கள் வழங்கிய*

# வாழ்த்துச் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தில் கல்விமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான கல்முனை பிராந்திய நிலைய ஆசிரிய மாணவர்களின் அயராத முயற்சியினால் ''கல்விமாணி'' சஞ்சிகை வெளியிடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். வடக்கு கிழக்கில் இன்று நிலவும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் இச்சஞ்சிகையை வெளியிட முன்வந்துள்ள ஆசிரிய மாணவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலும் இலங்கையின் கல்விப் புலத்தில் கல்வியியல் குறித்த தமிழ் மொழி மூலமான ஆய்வுகளும் கருத்துக்களும் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இக் காலகட்டத்தில் வெளிவரும் இவ்வாறான முயற்சிகள் காலத்தின் தேவையினை உணர்த்துபவையாகவும், இத்துறையில் ஈடுபடவுள்ளோருக்கு ஒரு வழிகாட்டியாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இன்றைய யுகம், தகவல் தொழில் நுட்பப் புரட்சிகளுடன் கூடிய சவால் மிக்கதாகும். துரித மாற்றங்கள் ஏற்பட்டுவரும் இக்காலத்துக்குப் பொருத்தமான ஆசிரியர்களை உருவாக்கும் தார்மீகப் பொறுப்பு கல்வியியலாளர்களுக்கு உண்டு. நாளாந்தம் தம்மைப் புதுப்பித்துக் கொண்டு கல்வியுலகைச் செழுமைப்படுத்த வேண்டியது ஆரியரது தலையாய கடமையாகும். அந்த வகையில் கல்வித் துறைசார் தேர்ச்சியினைப் பெற விழையும் கல்விமாணிப் பட்டதாரி மாணவர்களின் தேடலும் புத்தாக்க முயற்சிகளும் மென்மேலும் தொடர உளமாற வாழ்த்துகிறேன்.

**-ஷாஜஹான் ஷிபான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR LECTURERS

01. Al-Haj.U.L.Aliyar.(M.A.,PGDE.,SLEAS-1)

02. Rev.Bro.Dr.SAI.Matthew SSJ(SLEAS-1.,Ph.D.,)

03. Mr.M.K.M.Mansoor.(B.Sc,PGDE,M.Ed.(Canada),SLAS.)

04. Mr.S.N.A.Aroos.(B.Sc,Dip.in.Ed..Merit,,M.Sc.in.Sc.Ed.)

05. Mr.S.Thatsanamoorthy.(B.A.,M.Ed.)

06. Mr.D.Benjemin.(SLPS)

07.Mrs.K.Lohitharajah(B.A.in Eng.)

08. Mr.M.A.M.Jaleel.(B.A.Hons.,Dip.in.Ed..Merit.,M.A.)

09 Mr.A.M.Ahamed Lebbe.(B.Sc.,M.Sc.in.Env.Sc.,PGDE.,SLEAS)

10. Mr.S.M.A.Jiffry.(SLPS.,B.Ed.,SLEAS)

11. Mr.N.Nagendran.(B.A.,Dip.in.Ed.,M.A.)

12. Mrs.Uma Varathrajan.(B.A .in.Dance)

13.Mrs.S.Yogarajah.(B.A)

14. Mr.T.Kanesharatnam.(B.A.Hons.,Dip.in.Ed.Merit,M.Ed.,)

15. Mrs.Umapathy Sivam.(M.A)

16. Mrs.K.Thambyrajah.(M.Ed.)

17. Mr.M.P.Abul Hasan(ADE(Eng.)

18. Mr.S.l..H.Mohammath.(Dip.in.Journ.)

19. Mr.M.I.M.Basheer.(B.A..Hons.)

20. Mr.M.Mohamedsah.(B.B.A.)


21. Mr.S.H.AA.Ashraf.(B.A.Hons.)

22. Mr.I.M.Husain.(B.Sc.Sp.Hons.,M.A.in.Pub.Ad.,M.Sc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகைக்குழுத் தலைவரிடமிருந்து.....



தேசிய கல்வி நிறுவகத்தின் கல்முனைப் பிராந்திய நிலையத்தில் 2002~2004ஆம் வருட கல்வி மாணிப் பட்டக் கற்கை நெறி மாணவர்களின் ''கல்விமாணி'' எனும் சஞ்சிகை வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது நிலையத்தின் விடுகை வருட மாணவர்களின் கன்னி முயற்சியான இச்சஞ்சிகையில் பல்வகுதி கல்வியியலாளர்களினதும், மாணவர்களினதும் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இன்றைய மாணவ சமுதாயமும் கல்வி உலகும் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்ளக் கூடிய கருத்துக்களை வழங்கும் பல கட்டுரைகள் இதில் காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும்.

எமது பணியைச் செவ்வனே நிறைவேற்ற வழிகாட்டி ஊக்கம் தந்த எமது சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் யூ.எல். அலியார் அவர்களுக்கும், எமக்கான பணிகளை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றிய விரிவுரையாளர்கள் அனைவருக்கும் எமது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்நூல் இத்தனை சிறப்புடன் வெளிவர அயராது உழைத்த பதிப்பாசிரியர் ஜனாப் A.C. நியாஸ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அன்புடன்

எம்.எச். நவாஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...



அல்லாஹ்வைத் துதித்தவனாக ஆரம்பிக்கின்றேன்.

ஆசிரிய வாண்மை அபிவிருத்தியில் ஆழமான கால்பதித்த தேசிய கல்வி நிறுவகம் அதன் செயற்பாடுகளைப் பரவலாக்கிய போது விளைந்த நன்மையே கல்முனைப் பிராந்திய நிலையமாகும். இந்நிலையத்தின் முதல் பிரசவமே 2002/2004ஆம் ஆண்டின் ''கல்விமாணி'' கற்கை நெறியாகும். இக்கற்கை நெறியின் ஒழுங்கமைப்பில் ''கல்விமாணி'' எனும் முதல் வெளியீடு வெளியிடப்படுகின்றது. இதன் ஆசிரியர் என்ற ரீதியில் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வதில் நான் மிகப் பெருமிதமடைகிறேன்.

ஒரு நூலை வெளியிடுவதில் ஏகப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதைக் கல்வி உலகம் நன்கறியும். எனினும் சோர்ந்துபோனால் சோடை போய்விடும் என்ற அச்சம் என்னை ஆட்கொண்டதால் இடர்பாடுகளை இலகுவாக முறியடித்து ஒரு உத்வேகத்துடன் செயற்பட வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.

இவ்வேளை தமது நேசக்கரங்களை உடல், பணம், ஆலோசனை ரீதியாக வழங்கிய ஆசிரிய மாணவர்கள்,விரிவுரையாளர்கள், மற்றும் கல்விமான்கள் அனைவருக்கும் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக எங்கும் உயர்வாகப் பேசப்படும் கல்விமானும் எங்களது வழிகாட்டியும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாபூஷணம் அல்ஹாஜ் யூ.எல். அலியார் அவர்களுக்கு வார்த்தைகளாலோ, எழுத்துக்களாலோ விபரிக்கமுடியாத நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

காலவோட்டத்தின் கனவேகத்துடன் தம் கருமங்களையே செய்ய முடியாமல் திணறும் இந்த யுகத்தில் எங்களின் வேண்டுகோளை ஏற்று இந்தச் சஞ்சிகைக்கு இதன் தரம் உயர்வாகவே இருக்கவேண்டும் என்பதில் கன உறுதியுடன் இதய சுத்தியாகச் செயற்பட்டு சிறப்பு ஆக்கங்களைத் தந்துதவிய கல்வியியலாளர்கள், மதிப்புக்குரிய விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும், கல்விமாணியின் சிறப்பு மேலேங்கும் வகையில் ஆசியுரை வழங்கியோருக்கும் எனது நன்றியைக் காணிக்கையாய்ச் சமர்ப்பிக்கின்றேன்.

வெறும் கை முழம்போடாது என்பதை நாம் அறிவோம். அவ்வேளை உதவிக் கரம்நீட்டி உற்சாகமூட்டி கல்விமாணி நூலை வெளிக்கொணர உதவிய விளம்பரதாரர்கள், நிதியுதவியளித்து நூலை நிமிர்த்திய சக மாணவர்கள் ஆகியோருக்கும் நெஞ்சாற நன்றி கூறுகிறேன்.

பல கைகள் சேர்ந்து உயர்த்திப்பிடித்து உலகுக்கு வெளிச்சமிட்டு இந்நூலைக் காட்டிய பேரவைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், அச்சில் பிழை நீக்கிச் சீர்செய்துதவிய ஏஆர்ஏ ஜவாத் ஆசியரியர், கணணியில் கல்வெட்டுக்களாய் நூலை உருவாக்கி அச்சிட்டுத் தந்த நியூமெற்றோ அச்சக உரிமையாளர் எம்.அப்துல்லா மௌலவி, இச்சஞ்சிகைக்கான அழகிய அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஏ.எம். றஸ்மி ஆசிரியர் ஆகியோருக்கு எனது ஆழ்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

பிரியமுடன்
ஏ.சி. நியாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே........


| | | | |
|---|---|---|---|
| 01 | வகுப்பறை முகாமைத்தவத்தின் ... | ~ பேராசிரியர் Dr. சபா ஜெயராஜா | 01 ~06 |
| 02. | உங்கள் கைகளில்... | ~ திருமதி திவ்யராணி சிதம்பரநாதன் (முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.றி.) | 07 ~ 11 |
| 03. | 21ஆம் நூற்றாண்டுக்கான..... | ~ Mr. M.K.M. மன்சூர் (S.L.A.S., B.Sc., M.Ed.,) | 12 ~ 13 |
| 04. | DIFFERENCE IN THE BEHA.......... | ~ Mr. S.N.A. Aroos. (B.Sc., M.Sc. in Sc. Ed.) | 14 |
| 05. | தொழில் வாண்மை..... | ~ Mr. T. கணேசரட்னம் (M.Ed.,) | 15 ~ 16 |
| 06. | ஆசிரியர் கல்வியின் ..... | ~ Mr. M.A.M. ஜெலீல் (MA.) | 17 ~ 22 |
| 06. | ஆசிரியருக்கு அழகியல் கல்வி ..... | ~ Mr. S.M.A. ஜிப்ரீ (B. Ed. (Hons.) | 23 ~ 25 |
| 07. | கூத்தும் பாரம்பரியங்களும் | ~ Mr. N. நாகேந்திரன் (MA.) | 26 ~ 29 |
| 08. | வணங்குகிறோம். | ~ Mr. S. சா.தவயோகன் | 30 |
| 09. | இன்றைய குழந்தைகளின் .... | ~ Mr. T. பூவேந்திரன் | 31 ~ 32 |
| 10. | ஆரம்பக் கல்வியூடாக.... | ~ Mr. M.H. நவாஸ் | 33 ~ 35 |
| 11. | BACKWARD CHILDREN. | ~ Mrs. Naslin Rifka Ansar | 36 ~ 37 |
| 12. | ஜப்பானின் முன்னிலைப்படுத்திய.... | ~ Mr. P. ஜெகநாதன் | 38 ~ 39 |
| 13. | மாணவர்களை முரண்பாடுகளில்... | ~ Mr.A. அஹமட் றமீஸ் | 40 ~ 42 |
| 14. | கற்றல் கற்பித்தலை இலகு..... | ~ Mrs. க.தயாசீலன் | 43 ~ 44 |
| 15. | இலங்கையை மீளக்........ | ~ Mr. K. திருநாமம் | 45 ~ 48 |
| 16. | வெட்கித் தலை குனிகின்றேன் | ~ Mr. W.E. அருள் நேசன். | 49 |
| 17. | சிறுவர் பாடல். | ~ Mr. K. தயானந்தன் | 50 |
| 18. | ஆசானைப் போற்றுவோம். | ~ Miss. M. சாந்தமலர் | 51 ~ 52 |
| 19. | அதிபரின் கடமைகளும்.... | ~ Mr. S. ரவிச்சந்திரன் | 53 ~ 55 |
| 20. | புதிய ஆரம்பக் கல்வி கலைத்.... | ~ Mr. C.M. தௌபீக் | 56 ~ 57 |
| 21. | ஆரம்பக் கல்வி கற்பித்தலில்... | ~ Mr. .A. சஹ்றான் | 58 ~ 59 |
| 22. | பெயர்ப் பட்டியல் | (விடுகை வருட மாணவர்கள்) | 60 ~ 61 |
| 23. | பெயர்ப் பட்டியல் | (1ஆம் வருடம் ~ ஆரம்ப நெறி) | 62 ~ 63 |
| 24. | பெயர்ப் பட்டியல் | (1ஆம் வருடம் ~ இடைநிலை) | 64 ~ 65 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறை முகாமைத்துவத்தின் நவீன திருப்பங்கள்

பேராசிரியர் Dr. சபா ஜெயராசா

நவீன உளவியல் அணுகுமுறைகளின் உட்பாய்ச்சல்கள் பாரம்பரியமான வகுப்பறை முகாமைத்துவத்தின் மீது தீவிரமான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளன. அதிகாரத்தன்மை, அடக்கு முறைத் தன்மை, முற்சாய்வுப் பண்பு, பிரதிகூலம் எய்தியோர் வெளிவீசப்படுதல் முதலியன பாரம்பரியமான வகுப்பறை முகாமைத்துவத்தின் உறைந்து ஊறிய பரிமாணமாக விளக்கப்பட்டன. வலியுறுத்தல் அணுகுமுறைகளே **(Assertive Approaches)** அங்கு மேலோங்கியிருந்தன. பாரம்பரியமான வகுப்பறை முகாமைத்துவத்தின் கண்டிப்பு முறையினை விதந்து பேசுவோர், அந்த முறைமையால் தமது கல்விச் சுற்றுவட்டத்தை இழந்த மாணவர்கள் மீது கவனக் குவிப்பை ஏற்படுத்தியதில்லை.

1 - உளவியல் ஆய்வுகளின் வழியாக உருவாக்கப்பட்ட வகுப்பறை முகாமைத்துவ நடவடிக்கைகளுள் ***"தொழிற்பாட்டுப் புலமை அணுகுமுறை"*** (Business - Academic Approach) முதற்கண் குறிப்பிடத்தக்கது. (Carolyn, Evertson 1994, Class - room management for Elementary Teachers, Needham, Allyn and Bacon ) வகுப்பறையின் சூழல் நிலவரம், மாணவர் நடத்தைகள், போதனா நடவடிக்கைகள் முதலியவை தொடர்பான ஆசிரியர்களின் தெளிவான நோக்குகளுடன் இந்த அணுகுமுறை உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியரும் மாணவரும் தெளிவான செயல் நிரல் திட்டத்துடன் இயங்குவதற்குரிய இடமளிக்கப்படும். இந்த அணுகுமுறையில் வகுப்பு முகாமைத்துவம் மூன்று அடிப்படைகளில் முன்னெடுக்கப்படும். அவையாவன:

1) ஒப்படைகளும், வேலைத் திட்டங்களும் தொடர்பான தெளிவான தொடர்பாடலை ஏற்படுத்தல்.

2) மாணவர் வேலைகளை நெறிகை செய்தல்

3) பின்னூட்டல் வழங்குதல்

மாணவர்களை புலமைசார் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுத்துதலே இந்த அணுகுமுறையின் பிரதான நோக்கமாகும். **புலமை வேலைகளில் மாணவர்களைத் தீவிரமாக ஈடுபடுத்தும் பொழுது ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் உருவாக்கப்படுவதற்கு நேரம் கிடைக்காமற் போக்கும்.** புலமை விளைவு இயக்கத்தின் செல்வாக்கு இந்த முகாமைத்துவத்தில் இழையோடியுள்ளது. நேரடிப் போதனா முறை, மீக்கற்றல் (Mastery Learning) முறை, றியான்ஸ் என்பாருடைய வை (Y) வகை ஆசிரியத்துவம் முதலியவற்றின் செல்வாக்குகளை இந்த அணுகுமுறை உட்கொண்டுள்ளது. பொறுப்பு, தொழிற்பாடு, ஒழுங்கமைவு, எதிர்ப்புத் தவிர்த்தல் முதலியன 'வை' வகை ஆசிரியத்துவத்தின் இயல்புகளாகும். (Allan C Ornstein , (1995) Strategies for Effective Teaching, New York, Brown and Benchmark) புறொபி மற்றும் குட் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகளின் தாக்கமும் இவ்வகையான முகாமைத்துவ அணுகு முறையிலே செல்வாக்குச் செலுத்துகின்றது. (Brophy and Good (1974), eacher student Relationships New York, Holt, Rinehart and Winston)

மேற்குறித்த ஆய்வின் சாராம்சம் வருமாறு : ஒவ்வொரு மாணவரிடத்தும் அவரவர்களது தனித்துவங்களுக்குரிய அடைவு முன்னேற்றங்களையும் நடத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலங்களையும் ஆசிரியர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இதனால் ஒவ்வொரு மாணவரிடத்தும் ஒவ்வொரு விதமாக ஆசிரியர் நடந்துகொள்ள வேண்டியுள்ளது. மாணவர்களிடத்து கூடுதலான அடைவு முன்னேற்றத்தை ஆசிரியர் தொடர்ச்சியாக எதிர்பார்த்தால் அவை நிறைவேறுவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகரிக்கும். **உயர்ந்த அடைவுகள் பெறுவோரிடத்து ஒரு வித மனப்பாங்கையும் தாழ்ந்த அடைவுகள் பெறுவோரிடத்து வேறொரு மனப்பாங்கையும் ஆசிரியர் காட்டுதல் இருசாராரிடத்தும் நலக்கேடுகளை ஏற்படுத்தும்.** இவ்வாறாக பல்வேறு பண்புகளை அகல்விரிநிலையில் உள்வாங்கி வகுப்பறை முகாமைத்துவத்தில் ''தொழிற்பாட்டுப் புலமை அணுகுமுறை" உருவாக்கப்பட்டுள்ளது,

2 - வகுப்பறை முகாமைத்துவத்தில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது ***''நடத்தை மீளமைத்தல் அணுகுமுறை'*** (Behaviour modification approach) ஆகும். நடத்தைவாத உளவியலின் செல்வாக்கினை உட்கொண்டு இந்த அணுகுமுறை உருவாக்கப்பட்டுள்ளது. எத்தகைய நடத்தைகளை வளர்த்தல், எவற்றை இல்லாதொழித்தல் என்ற நோக்குகளை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறை முகாமைத்துவம் ஒழுங்கமைக்கப்படும். நடத்தைகள் விளைவுகளினால் உருவாக்கப்படுகின்றன. உடனடி மீள வலியுறுத்தல்கள் நடத்தைகளுக்கு வலுவூட்டுகின்றன. நேர் மீள வலியுறுத்தல்கள் மாணவர்களிடத்து கூடுதலான செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன. பொருத்தமானதும் முன்னேற்றகரமானதுமான நடத்தைகளுக்கு வெகுமதி தரப்படாவிடில் நடத்தைச் சீர்கேடுகள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மீள வலியுறுத்தல்கள் பலவகையாக அமையும். சொல்சார்ந்த மீள வலியுறுத்தல், உடல் மொழி சார்ந்த மீள வலியுறுத்தல், எழுத்துரு அல்லது படவடிவ மீளவலியுறுத்தல், பொருள்சார்ந்த மீளவலியுறுத்தல், பதவி வழங்கல் மீளவலியுறுத்தல் என்ற பல பிரிவுகள் காணப்படுகின்றன. இந்த உபாயங்களைப் பயன்படுத்தி நடத்தைகளைச் செப்பனிட்டு உருவாக்கும் முகாமைத்துவ நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்படும்.

மாணவர்களிடத்து நடத்தைகளைச் சீர்படுத்தி ஒழுங்கமைக்கும் சமூகக் கற்றல் நடவடிக்கையாக காட்டுருவாக்கம் (Modeling) அமைகின்றது. முன்மாதிரியான நடத்தை கொண்ட ஒருவரைப் பின்பற்றி மாதிரியாக்கம் செய்து முன்னேற்றம் பெறுதலை ஆசிரியர் வழிநடாத்தலாம். காட்டுரு ஒன்றைச் செய்து காட்டுதல், அதன்மீது கவனக்குவிப்பை ஏற்படுத்துதல், மாணவர்களைப் பின்பற்றச் செய்தல், பொருத்தமான பின்னூட்டல்களை வழங்குதல், வாழ்க்கையிலே பிரயோகித்தல் என்றவாறு காட்டுருவாக்கச் செயல்முறையை நடைமுறைப் படுத்தலாம்.

3 - பாடசாலை முகாமைத்துவ அணுகுமுறைகளில் சிறப்பாகக் குறிப்பிடப்படும் இன்னொருவகை ***''குழு முகாமைத்துவ அணுகுமுறை"*** (Group Managerial Approach) அமைகின்றது.

ஜேக்கம் கொவுனின் ஆய்வுகளில் இருந்து இந்த அணுகுமுறை உருவாக்கப்பட்டுள்ளது. (Jacob S. Kounin, (1977) Discipline and Class - Room Management, New York , Holt Rinehart and Winston) வகுப்பறை என்ற குழுவில் ஒரு மாணவர் பிசகான நடத்தையை வெளிப்படுத்தும் பொழுது ஆசிரியர் உடனடியாகத் துலங்கிப் பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும். அதிற் கவனம் செலுத்தாதுவிட்டால் அனைத்து மாணவரிடத்தும் அது பரவக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும்.

வகுப்பறையை மாணவர் நடத்தைக் கோலங்களின் அடிப்படையில் வகைப்படுத்துதல் ஏற்புடையதாகும். கற்றலில் ஈடுபாடு கொள்ளல் நேர் நடத்தை, விலகுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் நடத்தை-*கற்றலில் ஈடுபாடு கொள்ளும்பொழுது விலகல் நடத்தைகள் வலுவிழந்துவிடும்* உடனடியாகத் தலையிடுதல், குறித்த மாணவரை இனங்கண்டு தலையிடுதல் ஆகியவை இங்கு வலியுறுத்தப்படுகின்றன.

குழுச் செயற்பாடுகளைக் குவியப்படுத்தல், வகைகூற வைத்தல், மாற்றுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், முடிவுகளைக் கூறாது தொக்கல் நிலையை உருவாக்குதல் (Creating suspense) புதிய கற்றல் பொருட்களை முன்வைத்தல் முதலிய நடவடிக்கைகளால் விலகல் நடத்தைகளை வீழ்ச்சியடையச் செய்து கற்றலில் ஈடுபாட்டை ஏற்படுத்தலாம்.

4 - வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பாக உருவாக்கப்பட்ட பிறிதோர் அணுகுமுறை ***"குழு வழிகாட்டல் அணுகுமுறை"*** (Group Guidance Approach) யாகும். குழு அடிப்படையில் மாணவரின் அடித்தள நடவடிக்கைகளைக் கட்டுமானம் செய்தல் இங்கே சிறப்பிடம் பெறும். ஒழுக்கம், செயற்பாடுகள் முதலியவற்றை குழு நிலையிலே கையாளுதல் இங்கே சிறப்பிடம் பெறும். பிறிஸ்ட் றிடெல் என்பாரின் ஆய்வுகளில் இருந்து இது முதலில் உருவாக்கம் பெற்றது. (Fritz Redl and David Wineman, (1951) Children who Hate, New York Free Press) நடத்தைப் பிரச்சினைகள் பின்வரும் மூன்று காரணிகளில் இருந்து எழுவதாக அவர் குறிப்பிட்டார். அவை:

1. தனியாளின் வரலாற்றில் ஏற்பட்ட தாக்கங்கள்
2. பழகும் குழுக்களோடு தொடர்புடைய காரணிகள்
3. தனியாளினதும், குழுக்களதும் கூட்டு விளைவால் உருவான காரணிகள்.

குழு உளவியற் பொறியியல் (Group Psychological Engineering) என்பதை முன்னெடுப்பதன் வாயிலாக மாணவரின் நடத்தைகளை நல்ல முறையிலே ஒழுங்கமைத்துக் கற்றலை முன்னெடுக்கலாம் என்று கூறப்படுகின்றது. இங்கே குழு பற்றிய விளக்கம் சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றது.

**கற்றற் செயற்பாடுகள் அதிக இலகுவாக இருத்தல் அல்லது அதிக கடினமாக இருத்தல் ஆகிய இரு நிலைகளும் மாணவர்க்கு திருப்தியின்மையை ஏற்படுத்துகின்றன.** நன்கு ஒழுங்கமைக்கப்படாத வேலைத் திட்டங்களும் மாணவர்க்கு வெறுப்பை ஏற்படுத்திவிடும். பொருத்தமான ஆளிடைத் தொடர்புகள் காணப்படாதவிடத்தும், குழுக்களிடையே உராய்வுகள் ஏற்படுமிடத்தும், முறுகல் நிலை ஏற்படுமிடத்தும் கற்றற் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன. குழுவின் மனவெழுச்சிகளிலே திடீர் மாற்றங்கள் நிகழும்பொழுது அவற்றின் தாக்கங்கள் வகுப்பறை முகாமைத்துவத்தையும் கற்றற் செயற்பாடுகளையும் பாதிப்படையச் செய்கின்றன.

மேலைப்புல ஆய்வாளர்கள் குழுவின் தோற்றம், அமைப்பு தொழிற்பாடுகள் முதலியவற்றை 'அந்நியமயப்படுத்தி' நோக்குவதால் வகுப்பறை முகாமைத்துவமும், மாணவரின் நடத்தை மாற்றங்களும் நல்லொழுக்கமும் நிலைகொள்ளாமற் சென்றுவிடுகின்றன. சமூக இருப்பில் இருந்தே குழுவின் இருப்பும் கால்கோள் கொள்ளுகின்றது. சுரண்டலும், மனித விழுமிய வீழ்ச்சிகளும், தனிச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட தீவிர போட்டிகளும் சமூகத்திலே நிலவும் பொழுது, மாணவர்கள் இடம்பெறும் குழுக்களிலும் மாணவர்களால் உருவாக்கப்படும் குழுக்களிலும் அதன் இயல்புகள் இழையோடி நிற்கும். **இந்நிலையில் சமூகம் பற்றிய விளக்கத்தின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் வகுப்பறை முகாமைத்துவத்தைக் கட்டியெழுப்ப **வேண்டியுள்ளது.**

5 - வகுப்பறை முகாமைத்துவத்தில் அடுத்ததாக முக்கியத்துவம் பெறுவது ***"ஏற்புநிலை அணுகு முறை"*** (Acceptance Approach) ஆகும். மானிட உளவியலை அடிப்படையாகக் கொண்டு இந்த முகாமைத்துவம் உருவாக்கப்பட்டுள்ளது. **ஒவ்வொரு நபரும் தாம் ஏற்றுக்கொள்ளத்தக்கப்படுவோராய் இருத்தல் வேண்டும் என்ற தேவையைக் கொண்டுள்ளனர்.** மற்றவர் தம்மை விரும்ப வேண்டும், ஏற்றுக்கொள்ளல் வேண்டும், அங்கீகரித்தல் வேண்டும் என்பதை தாம் கற்க விரும்பியதிலும் பார்க்கக் கூடுதலாக எண்ணுகின்றனர். அவ்வாறே தவறாக நடப்பதைக் காட்டிலும் நன்றாக நடப்பதையே ஒவ்வொருவரும் விரும்புகின்றனர்.

''கண்ணீர் அற்ற ஒழுக்கக் கட்டுப்பாடுகள்" பற்றி றுடோல் டிறிக்கஸ் என்ற உளவியலாளர் விரிவாக விளக்கியுள்ளார். (Dreikurs and Pearl Casssel, (1988) Discipline without Tears, New York, Dutton), ஆசிரியராலும், சகபாடிகளாலும் அங்கீகரிக்கப்படும் தளரா உறுதி கொண்டிருத்தல் பொருத்தமான நடத்தைகளை வளர்ப்பதற்கும் கல்வியிலே ஆழ்ந்த கவனம் செலுத்துவதற்கும் அடிப்படையானதாகும். **தம்மை அங்கீகரிக்கும் பொருட்டு மாணவர்கள் எல்லாவிதமான நடத்தைகளையும் முன்னெடுப்பார்கள். அங்கீகரிப்புக் கிடைக்காவிடில் அவர்களிடத்து எதிர் நடத்தைகள் வளர்ச்சியடையத் தொடங்கும்.**

ஏற்புடைமை அல்லது அங்கீகாரம் கிடைக்கப் பெறாதவிடத்து அவர்களின் நடத்தைகள் பின்வருமாறு வளர்ச்சியடையத் தொடங்கும்

அ) கவனஈர்ப்பை நாடுதல் :
ஆசிரியரதும், சகபாடிகளினதும் அங்கீகரிப்பை வேண்டிக் கவன ஈர்ப்பில் ஈடுபாடு கொள்ளல் வளர்ச்சியடையலாம்.

ஆ) அதிகாரம் தேடல் :
அங்கீகரிப்பைப் பெறுவதற்கு அதிகாரம் தேடலும் ஓர் உபாயமாகப் பயன்படுத்தப்படும். எதிர்த்து வாதாடல், தாம் கூறுவதே சரியானது எனல், முரண்படுதல், ஏமாற்றுதல், கோபப்படல் முதலியவை அதிகாரம் தேடலுக்குரிய சில எடுத்துக்காட்டுகளாகும்.

இ) ஆத்திரம் தீர்க்க முயலுதல் :
வகுப்பிலுள்ளவர்களது மனக் கோலங்களைப் பாதிப்படையச் செய்தல், தமக்குத் தண்டனை கிடைக்கும் என்பதையும் பொருட்படுத்தாது எதிர் நடவடிக்கைகளில் இறங்குதல், பகுத்தறிவு பூர்வமான செயற்பாடுகளைப் புறக்கணித்தல், முதலியவை இப்பிரிவில் அடங்கும்.

ஈ) பின்வாங்குதல்:
தமது ஆற்றல்களை வெளிப்படுத்தாது ஒதுங்கிக் கொள்ளல், தனிமைப்படல், ஆதரவற்ற நிலைமைக்கு அடிமையாதல், முதலியவை இப்பிரிவில் இடம்பெறும்.

**மாணவர் தாம் தவறவிட்ட இலக்கு எது என்பதைக் கண்டறிதல் இவ்வகை முகாமைத்துவத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.** அதனைத் தொடர்ந்து அவர்கள் மேற்கொள்ளும் நடத்தைகள் பற்றி நட்புடன் வியாக்கியானம் தர அவர்கள் தமது நடத்தைகளை மாற்றியமைக்க முயலுவார்கள். எதிர் நடத்தைகளை மாற்றியமைப்பதற்குரிய ஊக்கலையும் உற்சாகத்தையும் ஆசிரியர் வழங்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 - வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட அணுகு முறைகளுள் ***''வெற்றி அணுகுமுறையும்''*** (Success Approach) ஒன்றாகும். இது நடப்பியல் சிகிச்சை (Reality Therapy) அடைவு நிலைகளிலும் நடத்தை நிலைகளிலும் மாணவர்களை வெற்றியடையச் செய்வதே இந்த அணுகு முறையின் நோக்கமாகும்.

நல்ல நடத்தைகள் நல்ல தெரிவுகளில் இருந்து தோன்றுகின்றன. நல்ல தெரிவுகளை மேற்கொள்ளுமாறு மாணவர்களைத் தூண்டல் வேண்டும். தமது பெறுமானங்களை உணர்ந்த மாணவர்கள் தவறிழைக்க மாட்டார்கள். வெற்றியை ஈட்டிவரும் மாணவர்களும் தவறிழைக்க மாட்டார்கள்.

தமது நடத்தைகளுக்குத் தாமே பொறுப்பு என்பதை வலியுறுத்தும் ஆசிரியர் **பொருத்தமற்ற நடத்தைகளுக்குப் பதிலீடான நல்ல நடத்தைகள் பற்றிய விளக்கங்களைத் தருதல் வேண்டும்.** தவறான நடத்தைகளால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய விளக்கம் மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறல் வேண்டும். கிளேசரால் உருவாக்கப்பட்ட வெற்றி அணுகுமுறை ''சித்தியடையாத மாணவர்கள் இல்லாத பாடசாலை உருவாக்கும் விசைகளை முன்னெடுத்தது. ஆனாலும் ஆசிரியர்களுக்குரிய வேலைப்பழு நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் நிலைகளில் வெற்றி அணுகு முறையை நடைமுறைப் படுத்துதலில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. (Glasser, Control Theory in Class-room (1986) New York , Harper and Row)

மேலைப் புலக்கல்வி முகாமைத்துவ அணுகுமுறைகளை நேரடியாக எமது சூழலுக்குப் பிரயோகித்தல் பொருத்தமற்றது. பல்வேறு கல்வி நடவடிக்கைகள் செயலிழந்து சென்றமைக்கும் இலக்குகள் எட்டப்பட முடியாது சென்றமைக்கும் இந்த ஒரு தலைப்பட்சமான போக்கும் காரணமாயிற்று.

எமது சூழல், எம்மிடையே காணப்படுகின்ற சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், கல்வி வளங்களைப் பகிர்ந்தளிப்பதிலே காட்டப்படும் இனத்துவ அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள், சமூக முரண்பாடுகள் முதலியவற்றைக் கருத்திற் கொண்ட கல்வி முகாமைத்துவ ஆக்கத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இன்றைய கல்வி முகாமைத்துவம் வாய்ப்புமிக்கோருக்குச் சாதகமான கட்டமைப்பைக் கொண்டுள்ளமையால் பிரதிகூலக் குழுவினர் இலகுவாக வெளிவீசப்பட்டுவிடுகின்றனர். பிரதிகூலக் குழுவினரைக் குவியப்படுத்தி ஊக்குவிக்கும் கல்வி முகாமைத்துவத்தை உருவாக்க வேண்டியுள்ளது.

நிர்ப்பந்தங்களால் பின்னடைந்தவர்களையும் பிரதிகூலம் அடைந்தவர்களையும் முன்னேற்றும் கல்வி முகாமைத்துவம் பின்வரும் அடிப்படைகளிலே கவனம் செலுத்துதல் வேண்டும்.

அ. கற்றல் வேகத்திலே தாமதித்தவர்களை முன்னெழச் செய்யலாம் என்ற உறுதி. அவர்களின் உளவியல் தேவைகளை அறிந்து மன வெழுச்சிகளை முகாமை செய்தல்.

ஆ. மேலதிக வேலைகளைத் தண்டனைகளாகக் கொடுத்தலைத் தவிர்த்தல்.

இ. பெரும் அலகுகளைச் சிறுசிறு அலகுகளாக்கிக் கற்கச் செய்து முன்னேற்றங்களை ஊக்குவித்தல்.

ஈ. நேர்முகமான எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கியதாக தொடர்பாடல் இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. பொருத்தமான பௌதிக தூரத்தையும் உளவியல் தூரத்தையும் பராமரித்தல்.

ஊ. உளவியற் கட்டுப்பாடு இன்மை, பகதளிப்பு என்பவற்றைப் பராமரிப்பதற்கும், நெறிப்படுத்துவதற்குமுரிய கட்டமைப்புக்களை உருவாக்குதல்.

எ. பண்பாட்டுத் தளங்களை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தலை ஒழுங்கமைத்தல். உதாரணமாக மொழிப்பிரயோகம், உதாரணங்கள், பிரச்சினை விடுவித்தல் முதலியவை அவர்களின் பண்பாட்டுத் தளங்களில் இருந்து எழவேண்டும்.

ஏ. குழப்ப நிலைகளிலிருந்து சாந்திக்கு நிலைமாறும் பயிற்சிகளை வழங்குதல்.

ஐ. பொருத்தமான சமிக்ஞை தலையீடுகளை (Signal Interferences) ஏற்படுத்துதல். இதில் உடல் மொழி சிறப்பான இடத்தை வகித்தல் வேண்டும்.

ஒ. அடைவுகளை எட்டுவதற்கு தடை நிலையிலுள்ள அலகுகளை (Hurdle Units) இனங்கண்டு ஆவன செய்தல்.

ஓ. மறை கலைத்திட்ட செயற்பாடுகளை நெறிப்படுத்துதல்.

ஔ. பின்னூட்டல் வாயிலாகச் சுய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

∴ சீர்மிய உபாயங்களைக் கற்றல், கற்பித்தலிலே பிரயோகித்தல்.

கலைத்திட்டச் செயற்பாட்டிலும், கற்றல்-கற்பித்தற் செயற்பாட்டிலும் ஒன்றிணைந்த பகுதியாக வகுப்பறை முகாமைத்துவம் விளங்குகின்றது என்பதை மனங்கொள்ளல் வேண்டும்.

பரீட்சைக்குத் தயாரிப்பதில் மட்டுமே வகுப்பறை முகாமைத்துவம் ஊன்றிய கவனம் செலுத்தும் நிலையில் மாணவரின் ஆளுமை வளர்ச்சியும் ஒழுக்க வளர்ச்சியும் புறக்கணிப்புக்கும் நிராகரிப்புக்கும் உள்ளாகின்றன. இந்நிலையில் வகுப்பறை முகாமைத்துவம் மாணவரிடத்து பதகளிப்பை வளர்க்கும் நிலவரங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் கொண்டுள்ளன. இது மேலாதிக்கம் செலுத்துவோருக்குச் சாதகமான கட்டமைப்பை உருவாக்கிவிடுகின்றது.

**References**


1. Allan C. Ornstein (1995) Strategies for Effective Teacheing, New York Brown and Benchmark.
2. Brophy and Good (1974) Teacher Student Relationships, New York, Holt Rinehart and Winston.
3. Ccrolyn, M, Evertson (1994) Class-room Management for Elementary Teachers, Needham , Allyn and Bacon.
4. Dreikurs and Pearl Carsel, (1988) Discipline without Tears, New York Dutton.
5. Fritz Redl and David Wineman (1951) Children who Hate, New York Free Press.
6. Glasser (1986) Control Theory in Class-room, New York, Harper and Row.
7. Jacob S. Kounin (1977) Discipline and class-room Management, New York, Holt Rinehart and Winston.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைகளில் ooooooooo

திவ்வியராணி சிதம்பரநாதன்.

உலகின் கண் வாழும் அனைத்து மனிதர்களதும் பிறப்பும் சிறப்பானதே! "அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது" என ஔவைப் பிராட்டியார் கூறுகின்றார். ஆம், ஏனைய உயிரினங்களுடன் மனிதப் பிறவியை ஒப்பிட்டு நோக்கும்போது, மனிதனிடம் அதி சிறந்த, அதியுயர்ந்த உள ஆற்றல்கள் காணப்படுவது கண்கூடு. இவ்வுள ஆற்றல்களை; சிந்திக்கும் திறன், பகுத்தறியும் திறன், தொகுத்தறியும் திறன், கிரகிக்கும் திறன், நியாயிக்கும் திறன், பிரச்சினை தீர்க்கும் திறன், ஆக்கத்திறன் போன்றவாறு பாகுபடுத்திக் கூறலாம். இவ் ஆற்றல்களைச் சிறந்த முறையில் செயலாற்ற வல்லது எமது உள்ளமே! அந்த வகையில், எமது உள்ளத்தை ஆரோக்கிய முள்ளதாகப் பேணிச் சீரான முறையில் இயங்கவைக்க வேண்டியது எமது பொறுப்பல்லவா? உள்ளத்தை ஆரோக்கியமுள்ளதாக வைத்திருப்பதற்கு நாம் யாது செய்ய வேண்டும்? சிந்திக்கும் ஆற்றலுள்ள மனிதர்களே இதுபற்றிச் சிந்தியுங்கள்.

சிறந்த உளநலம் பேண வேண்டுமென்றெல்லாம் இன்று பரவலாகப் பேசப்படுகின்றது. அந்த வகையில்

* உளநலம் என்றால் என்ன?
* உளநலம் குன்றுவதற்கான காரணம் யாது?
* உளநலம் குன்றுவதனால் ஏற்படும் விளைவு என்ன?
* உளநலத்தைச் சீராகப் பேணுவது எப்படி?
* உளநலச் சீராக்கத்தில் உங்கள் பங்களிப்பு என்ன? போன்றவற்றை இங்கு ஆராய்வது முக்கியமாகும்.

**உளநலம் என்றால் என்ன?**

உளநலம் என்பது மகிழ்ச்சியான உள்ளம் / ஆரோக்கியமான உள்ளம்/ பகதளிப்பு அற்ற நிலை / சீரான மனவெழுச்சி என்பனவாகும். ஒருவரது உடலினுள் உள்ளம் உள்ளது. ஆகவே உடல் வேறு, உள்ளம் வேறு எனப் பிரித்துப் பார்க்க முடியாது.

**"ஆரோக்கியமான உடலில், ஆரோக்கியமான உள்ளம் உள்ளது"** இது ஒரு பொதுவான கூற்று.

சுகாதார உளவியலாளர்கள் ஆரோக்கியமான உடல், உளநிலை தொடர்பாக இரண்டு அம்சங்களை வலியுறுத்திக் கூறுகின்றனர்.

1. நோய்க்கு இட்டுச் செல்லும் நடத்தைகளைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி, அவற்றிற்கான உதவிகளை வழங்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆரோக்கிய வாழ்விற்கு இட்டுச் செல்லும் நடத்தைக் கோலங்களை பின்பற்றுவதற்கு உதவுதல்

மேலும், சுகாதார உளவியலாளர்கள் தமது ஆய்வுகளுக்காக உள, சமூக உயிரியல் மாதிரியைப் (Bio Psycho Social Model) பயன்படுத்துகின்றனர். அதாவது ஒருவரது நோயற்ற / நோயுற்ற தன்மையில் செல்வாக்குச் செலுத்துபவை உடற் காரணிகள், உளக்காரணிகள், சமூகக் காரணிகள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இம்மூன்றும் ஒன்றுடனொன்று இடைத்தாக்கமடைந்து ஒருவரது உடல் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற போதிலும் இவற்றுள் மிக முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவை உளக் காரணிகளாகும்.

உளக்காரணிகளாக ஒருவரது சிந்தனை, நம்பிக்கை, மனப்பாங்கு, புலக்காட்சி, உணர்வு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக்காரணிகள் ஒருவரது உளநிலையைச் சீரான அல்லது சீரற்ற முறையில் இயங்க வைக்கும் தூண்டிகளாக அமைகின்றன. இத்தூண்டிகள் சீரான முறையில் இயங்கும்போது, உடல், உள்ளம் ஆகிய இரண்டும் சிறப்புற்று விளங்கும். ஏனைய இரு காரணிகளான உடற் காரணி, சமூகக் காரணிகளைப் போலல்லாமல், உளக் காரணிகளைத் தனிமனிதனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். அந்த வகையில் உளக் காரணிகளை மையமாக வைத்து சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

**உளநலம் குன்றுவதற்கான காரணம் யாது?**

உளநலம் குன்றுவதற்கான காரணிகள் பல உள்ளன. இது தொடர்பாக ஏராளமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுகாதார உளவியலாளர்களின் ஆய்வுகளின் பிரகாரம் முதிர் பருவத்தின் முன்னர் அதாவது இளம்பருவத்தினர் சீரற்ற மனவெழுச்சியின் காரணமாக உளநலம் குன்றி இறப்பதற்கான பிரதான காரணம் அவரவர் மேற்கொள்கின்ற வாழ்க்கை முறை (Life style) என்று அறியப்பட்டுள்ளது.

ஒருவரது வாழ்வின் சிறப்பு நிலை,

* சத்துள்ள நிறையுணவை உண்ணுதல்.
* நற்பழக்க வழக்கங்களைப் பேணல்.
* சிறந்த சமூக உறவுகளைக் கடைப்பிடித்தல்.
* தேவையான உடற்பயிற்சி செய்தல்
* பருவநிலைக் கேற்ற ஓய்வு, நித்திரை மேற்கொள்ளல்.
* தகைப்பு நிலையைச் சீராக்கம் செய்தல்

போன்றவற்றில் தங்கியுள்ளது.

உளநிலை பாதிப்படைவதற்கான பிரதான காரணி தகைப்பு (Stress) ஆகும். நாம் செய்ய முற்படும் செயல்களுக்குத் தடை அல்லது தடையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவதற்கான அச்சுறுத்தல்களை வழங்கி, அவற்றினூடாக எமது உடல், உளத் தொழிற்பாட்டைச் சீரற்ற முறையில் இயங்க வைக்கும் நிலையே தகைப்பு எனப்படும். மருத்துவ நிபுணர்களின் கணிப்பின்படி, 50% - 70% இடைப்பட்ட தொகையினரின் நோய்க்கான காரணம் இத்தகைப்பு நிலை எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு உள்ளத்தில் ஏற்படும் தகைப்பு நிலை, ஒருவரது உடலில் பாரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இத்தகைப்பு நிலை உளநலம் குன்றுவதற்குப் பிரதான காரணியாக உள்ளது.

**உளநலம் குன்றுவதனால் ஏற்படும் விளைவுககள் யாவை?**

* குடற்சுரப்பிகளினின்றும் குடற் சுரப்புகளை மேலதிகமாகச் சுரக்கத் தூண்டுகிறது. இதன் காரணமாகக் குடலைப் பாதுகாக்கும் மேலணி இழையம் பாதிப்புற்று வயிற்றுப் புண் உண்டாகும் நிலை உருவாகின்றது.

* மனித உடலின் கலங்களிலுள்ள இரசாயனப் பதார்த்தங்களின் தன்மையை மாற்றுவதனால் இந்நிகழ்வுகள் உடல், உளக் கோளாறுகளை உண்டு பண்ணுகின்றன. உதாரணமாக, எமது உடலில் காணப்படும் கானில் சுரப்பிகளுள் ஒன்றான அதிரினற் சுரப்பியினால் சுரக்கப்படும் அதிரினலின் (Adrenaline), தகைப்பு ஏற்படும் காலங்களில் அளவுக்கதிகமாகச் சுரக்கப் படுகின்றது. மேலதிகமான இச்சுரப்பு குருதியமுக்கத்தை உண்டுபண்ண வல்லது. இதன் விளைவாகக் குருதிநாடிகள் தடிப்படைந்து மாரடைப்பு போன்ற இதயம் சம்பந்தான நோய்களைத் தோற்றுவிக்கின்றன.

* சமிபாட்டுத் தொகுதியில் மலச்சிக்கல் அல்லது வயிற்றோட்டம் போன்றவற்றை உருவாக்கி உடலைச் சீரற்ற தொழிற்பாட்டுக்குத் தள்ளி விடுகின்றது.

* மனவெழுச்சித் தளம்பலை உருவாக்குவதனால், தலையிடி, கபால இடி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

* குருதிச் சுற்றோட்டத் தொகுதியில் ஓமோன்களின் சமனற்ற தன்மையை உருவாக்குகின்றது. இதனால் தோல் சம்பந்தமான நோய்கள் உருவாகின்றன.

* நிர்ப்பீடனத் தொகுதியைத் தாக்குகின்றது. எமது உடலைப் பக்ரீரியா, வைரசு போன்ற நோய்க்கிருமிகளினின்றும் பாதுகாப்பது நிர்ப்பீடனத் தொகுதியாகும். இத்தொகுதி நிணநீர்க்கலங்களை (Lymphocytes) உரு வாக்குகின்றன. இவை முறையே நோய்க்கிருமிகளைத் தாக்கி அவற்றை அழிக்கின்றன. ஒருவரிடம் தகைப்பு காணப்படும் பட்சத்தில், இக்கலங்களின் உற்பத்தி குறைவடைகின்றது. இதனால் எமது உடலில் நோய்க்கிருமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினால் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படுகின்றன. நிர்ப்பீடனத் தொகுதி நலிவடைதலே இதற்குக் காரணமாகும்.

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து உளநலம் குன்றுவதனால் ஏற்படும் பாரிய விளைவுகளை அறிந்துள்ளீர்கள். ஆகவே, உளநிலை சீராக்கம் பெற வேண்டியது மிக முக்கியமாகும்.

**உளநலத்தைச் சீராகப் பேணுவது எப்படி?**

* உடல், உளத் தேவைகளை ஓரளவு பூர்த்தியாக்கல்.

* தகைப்பு நிலையை ஒரு சவாலாக மாற்றுதல்

* நாம் செல்லும் இலக்கை அடையமுடியாவிடில் அச்செயலை திசை திருப்புதல்

* சமூகத்தின் ஒத்துழைப்பை நாடுதல் (மனம் திறந்து பேசுவதற்கு, தீர்மானம் எடுப்பதற்கு, பிரச்சினை தீர்ப்பதற்கு ஆலோசனை பெறுவதற்கு)

* தகைப்பு ஏற்படுவதற்கு முன்னரே தம்மைத் தயாராக்குதல்.

* சிறந்த வாழ்க்கை முறையைப் பேணுதல்.

* 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பொன்மொழிக் கேற்ப வாழப் பழகிக் கொள்ளல்.

உளநலத்தை நாமும் சீராகப் பேணி ஏனையோரும் சீராகப் பேண வழிவகுப்பது எமது பாரிய பணிகளில் ஒன்றல்லவா?

**உடல் நலச் சீராக்கத்தில் உங்கள் பணி என்ன?**

கற்றல் - கற்பித்தல் பணியில் பாரிய சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் பெற்றோருக்கும் ஏனையோருக்கும் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். எமது இளம் சந்ததியினர் இன்று தாங்கொணாத் துயரத்தில் மூழ்கியுள்ளனர். அவர்கள் எதிர்கொள்ளும் துன்பங்களை இங்கு எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. அத்தகையோருக்கு சரியான வழிகாட்டலை வழங்கி அவர்களது உளநலத்தைப் பேண வேண்டியது எமது கடமையாகும். குறிப்பாகக் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் தமது கற்பித்தற் பணியுடன் மாணவர்களது உள நலம் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உளநலம் பேணுவதில் கையாளக் கூடிய சில வழிமுறைகள் :**

* முதற்கண் உங்கள் உளநிலையைச் சீர்செய்யுங்கள்.

* அடுத்து மாணவர்களது உளநிலை பேணுவதில் கவனம் செலுத்துங்கள்

- மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குதல்.
- கற்றல் - கற்பித்தல் பணியைத் திறம்பட ஆற்றுதல்.
- உடல் உளத் தேவைகள் (அன்பு, பாதுகாப்பு, கணிப்பு) ஓரளவு பூர்த்தியாக்கல்.
- ஆசிரிய மாணவ உறவை வலுப்படுத்தல்.
- இணைப்பாட விதான செயற்பாடுகளில் யாதாயினும் ஒன்றிலாவது சகல மாணவரையும் ஈடுபட வைத்தல்.
- மாதத்தில் ஒருமுறையாவது பெற்றோருடன் கலந்துரையாடி மாணவர் பிரச்சினைகளைத் தீர்க்க முயலுதல்.
- தினமும் ஒருசில நிமிட நேரமாவது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.
- தினமும் மாணவர்கள் ஆற்றிய சிறந்த செயல் பற்றிச் சிந்திக்க வாய்ப்பளித்தல்.
- வகுப்பறையினுள்ளும் வெளியேயும் குழுச் செயற்பாட்டில் ஈடுபட வைத்தல்.
- நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகச் செயற்படல்.
- ஏனையோரிடம் காணப்படும் நேர் பண்புகளை நோக்கும் மனப் பாங்கினை விருத்திசெய்தல்.
- தமது மகிழ்ச்சிக்கும் துக்கத்திற்கும் தாமே பொறுப்பு என்பதை உணரவைத்தல்.

இங்கு கூறப்பட்டவை ஒருசில வழிமுறைகள் மட்டுமே! ஆசிரியப் பணி மகத்தானது ஒருசிலர் ஆசிரியர்களாகவே பிறக்கின்றனர். வேறு சிலர் ஆசிரியர்களாக உருவாக்கப்படுகின்றனர். எது எப்படி இருப்பினும் ஆசிரியப் பணியில் ஈடுபட்டுள்ள அத்தனை ஆசிரியர்களும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி, கடமை உணர்வோடும் அர்ப்பணிப்போடும் தம் பணியை ஆற்ற வேண்டும். இதற்கான சிறந்த உளநலனை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உள்ளங்களில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பிள்ளைகளின் உளநலம் முற்றுமுழுதாக உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது !**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் நூற்றாண்டுக்கான மூளை விஞ்ஞானம்

விரிவுரையாளர் M.K.M. மன்சூர்

உயிரினங்களின் பரினாமப் பாதை 3.5 billion வருடங்களைக் கொண்டது. இவற்றில் கூர்ப்பின் உச்ச நிலையில் காணப்படும் விலங்கு மனிதன். இதில் உச்ச விருத்தியைக் காண்பிக்கும் அங்கம் மூளை. மூளையைத் தவிர ஏனைய சகல அங்கங்களும் மனிதனைவிடப் பல்வேறு விலங்கினங்களில் பல மடங்கு விருத்தியடைந்து காணப்படுகின்றது. மனிதனை விடப் பெரிய மூளை யானை, திமிங்கிலம் போன்றவற்றில் காணப்பட்டாலும் இப்பிரபஞ்சத்தில் உருவாகியுள்ள மிகச் சிக்கலான, மனித புத்திக்கு எட்டாத, சக்தி மிக்க கட்டமைப்பு மனித மூளையாகும். இது தன்னைப் பற்றித் தானே கற்க முடியாத ஆனால் தன்னைப் பற்றிக் கற்க விரும்புகின்ற அங்கமாகும். இதில் கிட்டத்தட்ட 12-15 billion நரம்புக்கலங்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஏனைய நரம்புக்கலங்களுடன் நரம்பு மூளைகள் மூலம் தொடர்புறக் கூடியது. இவற்றுக்கிடையில் நடைபெறும் தொடர்பாடல்களின் எண்ணிக்கை இப்பிரபஞ்சத்திலுள்ள அணுக்களின் எண்ணிக்கையை விட அதிகம்.

நான் இவ்வாறு மூளையைப் பற்றிச் சொல்வதற்குக் காரணம் எனது ஆசிரியர் வாழ்வில் கற்றல் பற்றி அதிகம் சிந்திப்பதனால் ஆகும். மனிதக் கற்றலின் மொத்த இருப்பிடம் மூளைதான். இங்கு எவ்வாறு கற்றல் நடைபெறுகின்றது? கற்றல் நடைபெறுவதை எவ்வாறு கற்கலாம்? சிந்தனை எவ்வாறு உருவாகின்றது? ஞாபகம் வைத்திருப்பதற்கு விஷேட நுட்பங்கள் உண்டா? வினைத்திறன் வாய்ந்த முடிவுகளை எவ்வாறு எடுக்கமுடியும்? மாணவர்களின் creative thinking ஐ எவ்வாறு உயர்த்த முடியும்? என்பன போன்ற வினாக்கள் எனக்குள் அவ்வப்போது உதித்துச் செல்லும்.

The great brain கொண்டோராக லியானாடோ டாவின்ஸி (Leornardodavinci) ஐன்ஸ்றின் (Einstein) பிகாஸோ (Picasso) டாவின் (Darwin) நியூற்றன் (Newton) மைக்கல் ஏஞ்சலோ (Michel Angelo), எடிசன் (Edison), கொலம்பஸ் (Columbus) போன்றோரைக் குறிப்பிடுகின்றனர். இவர்கள் போல் எனது மாணவர்களும் வரவேண்டும் என்ற ஆசை என்னிடம் உண்டு. கற்றலுக்கான செய்திகள் மூளைக்குள் பார்வை, கேட்டல், மணத்தல், தொடுகை என்பவற்றினூடாகவும் உடலியக்கத்தினூடாகவும் சென்றடைகின்றன. பார்வையூடாகக் கற்பவர்கள் வாசித்தல், எழுதுதல், படம் வரைதல், அட்டவணைகள், வரைபுகள் என்பவற்றினூடாகக் கற்கின்றனர். கேட்டலூடாகக் கற்பவர்கள் சத்தத்தை ஞாபகம் வைத்திருத்தல், சத்தத்தைக் கேட்டல், விவாதங்களிலும் கலந்துரையாடல்களிலும் ஈடுபடல் என்பவற்றின் மூலம் கற்கின்றனர். உடலியக்கத்தின் மூலம் கற்பவர்கள் அசைவுகளை ஏற்படுத்தல், நடித்தல் முதலிய உடலியக்கச் செயற்பாடுகள் மூலம் கற்கின்றனர். இவை யாவற்றையும் ஒன்றுசேரச் செய்யும் போது கற்றல் கூடுதலாக நடைபெறுகின்றது. உதாரணமாக ஆசிரியரின் கட்டளைக்கேற்ப களியைக் கொண்டு ஒரு மாணவன் தனது கைகளால் ஒரு பொருளைச் செய்யும்போது மாணவரது கற்றல் அதிகரிக்கின்றது.

Tonybuzan (1970) மேற்கொண்ட பரிசோதனைகளின் விளைவாக ஒரு விடயம் சம்மந்தமாக Note taking நுட்பத்திலிருந்து Note Making நுட்பத்திற்கு மாணவர்களை மாற்றி கற்றலின் வினைத்திறனைக் கூட்டியுள்ளதாக அறிகின்றேன். இன்றைய பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்களில் நடைபெறுகின்ற Note Taking செயற்பாட்டை Note Making செயற்பாடாக மாற்றி கற்றலைக் கூட்டலாம். எமது மூளையின் இடதுபுறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள், இலக்கம், பகுப்பு, காரணங்காணுதல் என்பவற்றுடன் தொடர்புற மூளையின் வலதுபுறம் ஆவர்த்தனம், நிறம், பகற்கனவு, இடைவெளி, கற்பனைத்திறன் என்பவற்றுடன் தொடர்புபட்டு Mind Mapping ஐ உருவாக்குகின்றது. நான் இவ்வாறான Mind Map ஐ வெறும் எழுத்தை வாசிக்கச் செய்வதனால் உருவாக்க முடியாது. ஆகக் குறைந்தது நிறப்படங்களையும் வரைபுகளையேனும் அட்டவணைப் படுத்துவதன் மூலமே இரு பக்க மூளைகளையும் ஒன்றுசேர்த்து தொழிற்படச் செய்வதன் மூலம் கற்றலை வினைத்திறனுடையதாக மாற்ற முடியும் என நம்புகிறேன்.

Dr. A.A. Tomatis அவர்கள் France இலும் Dr. Gorgi Lozanovi அவர்கள் Balgaria விலும் 90 களில் மேற்கொண்ட பரிசோதனைகள் மூலம் இசை கற்றலுக்கு ஏற்ற ஒரு சூழலை உருவாக்குவதாகக் கருதியுள்ளனர். அதிக மூளை வேலையைத் தொடர்ச்சியாகச் செய்யும்போது இதயத் துடிப்பும் குருதி அமுக்கமும் அதிகரிக்கின்றன. மூளைக்குள் செல்லும் கணத்தாக்க வேகம் அதிகரிக்கின்றது. தசைகள் இழுவிசைக்குள்ளாகின்றன. குறிப்பிட்ட இசையை ஒலிக்கச் செய்வதன் மூலம் இவ்வுடல் நிலைமையை சாதாரண மட்டத்திற்குக் கொண்டுவந்து சிறிது நேரத்தில் மூளைத் தொழிற்பாட்டை அதிகரிக்கச் செய்யும்போது கற்றல் அதிகரிக்கின்றது. இதற்குரிய இசை Broque வகையாகும். இதனை 20 நிமிடம் கேட்கும்போது மிகப் பெரிய உடல் ஓய்வு கிடைக்கின்றது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Ken Davis யின் 'Atmospheres' Tony O'Connor இன் 'Wilderness' 'Bushland Dreaming', Don Campbell யின் 'Cystal Meditation' என்பனவும் மூளையின் கற்பனைத் திறன், ஆக்கத்திறன், மீள் சிந்தனை என்பவற்றைக் கூட்டுவதாக அறியக்கூடியதாக உள்ளது.

Bloom இன் பகுப்பாக்கத்தின் அறிதல் ஆட்சிப்பரப்பின் இறுதி நிலையில் Critical Thinking ஐ மாணவர்களிடத்தில் வளர்ப்பதற்குரிய கற்றல் நடவடிக்கைகளாக உண்மைகள் நம்பிக்கைகளின் அடிப்படையில் முடிவுக்கு வரும் செயற்பாடுகளை ஊக்கப்படுத்த வேண்டும். இது இடது மூளைசார் செயற்பாடாகும். மாணவர்களை வகுப்பாக்கம் செய்தல், செய்யத்தூண்டுதல், எண்ணக்கருப்படங்களை உருவாக்குதல் (எம்.கே.எம். மன்சூர் எழுதிய கல்வித் தத்துவத்தில் மேலதிக விபரம் உண்டு) பகுத்தல், தொகுத்தல், செய்பாடுகளில் ஈடுபடுபடவைத்தல் மூலம் Critical Thinking வளர்ச்சியடையும். ஆனால் Creative thinking மூளையின் வலது பகுதியின் செயற்பாடாகும். இதன் மூலம் மாணவர்கள் ஏதாவது ஒன்றைப் புதிதாக உருவாக்கத் தூண்ட வேண்டும்.

கற்றவைகளை முகங்கள், பெயர்கள், படங்கள், தரவுகள் - ஞாபகம் வைத்திருத்தல் மாணவர்களுக்கு பெரும் பிரச்சினையான விடயமாக உள்ளது. மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தல், ஒரு விடயத்தைப் பிறிதொன்றுடன் தொடர்புபடுத்தல், கற்பனை செய்யத் தூண்டி நேரம் ஒதுக்குதல் மூலமாக வினைத்திறன் வாய்ந்த ஞாபக சக்தியைத் தூண்ட முடியும்.

இதனடிப்படையில் உலகக் கல்வி வரலாற்றில் Transmission (வழங்குதல்) Transaction (பரிமாற்றம்) எனும் நிலைகளைத் தாண்டி இந்நூற்றாண்டில் Transformation (நிலைமாற்றம்) எனும் தத்துவங்களின் அடிப்படையில் கல்வி புகட்டப்பட்டாலும் (மன்சூர் 2005) ஆசிரிய பயிற்சிகளில் இன்னும் பழமைவாய்ந்த உளவியல், தத்துவம், வரலாறு போன்றவையே கூடிய கவனம் செலுத்தப்படுகின்றன. பதிலாக மூளையின் இயக்கம் சார்பான விடயங்களை அதிகரித்து அதனை மாணவர்களின் வகுப்பறையில் செயற்படுத்தத் தக்கவிதமான பயிற்சிகளை வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DIFFERENCE IN THE BEHAVIOURS OF INFANTS WITH AND WITHOUT AUTISM

Lecturer S.N.A. Aroos

**AUTISM (Autism Spectrum Disorder)**

It is a developmental disorder of brain function

* Impaired social interaction
* Problems with verbal and non-verbal communication and
* Unusual or severely limited activities and interests.

*Common characteristics and behaviours of Autism*

- *Difficulty in socializing with other children*
- *Resists learning*
- *Acts deaf*
- *No fear of real dangers*
- *Resists changes in routine*
- *Indicates needs by gesture rather than speaking or pointing*
- *Inappropriate laughing or giggling*
- *Resists cuddling*
- *Marked physical over activity*
- *Avoids eye contact*
- *Inappropriate attachment to objects*
- *Spins objects*
- *Sustained odd play*
- *Standoffish manner*
- *Characteristics become noticeable before CA 30 months.*

| **Infants with Autism** | **Normal Infants** |
|---|---|
| **Communication** | |
| ● Avoid eye contact | Study mother's face |
| ● Seem deaf | Easily stimulated by sounds |
| ● Start developing language, then abruptly stop talking altogether | Keep adding to vocabulary and expanding grammatical usage. |
| **Social relationships** | |
| ● Act as if unaware of the coming going of others | Cry when mother leaves the room and are anxious with strangers |
| ● Physically attack and injure others without provocation | Get upset when hungry or frustrated |
| ● Inaceessible, as if in a shell | Recognize familiar faces and smile |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்வாண்மை என்பது விசேட பயிற்சியை வேண்டி நிற்பதும், உயர் மட்ட சமூக அந்தஸ்த்தைக் கொண்டதுமான ஒரு பணியாகும். இப்பணியினை இன்னொருவரால் பிரதியீடு செய்ய முடியாது. உதாரணமாக வைத்தியர்களும் வழக்கறிஞர்களும் தொழில் வாண்மையாளர் வகையைச் சேர்ந்தவர்கள்.

**ஒரு தொழில்வாண்மையின் முக்கிய இயல்புகள் :**

01. ஒரு யாப்பு அல்லது சட்டமூலத்தினூடாக நிர்வகிக்கப்படல்.
02. ஒரு வாண்மைத் தொழிலில் நுழைவதற்கு கல்வித் தகைமையைப் போன்றே தொழில்சார் தகைமையும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல்.
03. தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிப் பத்திரம் பெறல்.
04. ஒழுக்காற்று விதிமுறைகளைக் கொண்டிருத்தல்.
05. பொதுமக்களுக்குச் சேவைசெய்யும் எண்ணத்தோடு இருத்தல்.
06. தொழில் அமைப்புக்களில் ஒருமைப்பாட்டுடன் இருத்தல்.

**ஆசிரியர் சேவை தொழில்வாண்மை என அறியப்படுத்தக்கூடிய தொழில்வாண்மையின் பண்புகள்**

01. மக்களுக்கு சேவை செய்யும் எண்ணத்துடன் தொழிலில் தங்கியிருத்தல்.
02. பெருந்தொகை அறிவைப் பெற்றுக்கொள்ளல்.
03. நீண்ட காலமாக விசேடமான பயிற்சிகளில் ஈடுபட்டிருத்தல்.
04. அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காகவும் தொழிலில் ஈடுபடுவதற்காகவும் தகைமைகளைப் பூரணப்படுத்திக்கொள்ளும் ஒரு ஒழுங்கான நிர்வாகத்திற்கு உட்படுதல்.
05. தொழில் வாண்மையுடன் தொடர்புடைய பல்வேறு காரணங்கள் பற்றிச் சுயமாக முடிவெடுக்கும் உரிமை.
06. தங்களால் செய்யப்படும் சேவைகளுக்கு ஏற்ப வெளிப்படும் முடிவுகள் மற்றும் செயல்கள் பற்றிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளல்.
07. தங்களின் செயல்கள் மற்றும் அச்செயல்களின் பிரதிபலனைப் பெற்றுகொள்ளல், கொடுக்கக் கூடிய சேவை பற்றி அவதானத்துடன் இருத்தல்.
08. தொழில் வாண்மையுடன் தொடர்புடைய அங்கத்தவர்கள் சுய நிர்வாகத்துடன் கூடிய தொழில் அமைப்புக்கள்.
09. தொழில் வாண்மையுடன் தொடர்புடைய நபர்களின் சுய வெற்றிக்கான அல்லது சாதனைக்கான சந்தர்ப்பத்தை ஏற்றுக்கொள்வதற்காக முக்கிய இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் தொழிற் சங்கமும் செல்வந்தர் குழுவும்.

10. தங்களுடைய சேவை பற்றிய நிச்சயத் தன்மையற்ற சேவையைத் திருத்தியமைத்துக் கொள்வதற்கு உதவும் ஒரு தார்மீகத்திட்டம்.
11. மேல் மட்டத்தில் புகழும் உயர்மட்டப் பொருளாதார மட்டமும்.
12. நிர்வாகத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தொழில் வாண்மை விடயங்களுக்காக வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

இவ்வாறான தொழில்வாண்மைப் பண்புகள் இலங்கை ஆசிரியர்களிடையே எவ்வளவு தூரத்திற்கு நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதனை அறிந்துகொள்வதற்குப் பயன்படும்.

**இலங்கையில் ஆசிரியர் சேவையின் தொழில்வாண்மை பற்றிய பிரச்சினைகள்**

01. ஆசிரியத் தொழிலானது வேறு தொழில்வாண்மையினதைப் போன்று பிரமாணங்களினால் நிர்வகிக்கப்படும் ஒன்றல்ல.
02. ஆசிரியர் சேவைக்காக தொழிற் சங்கம் ஒன்று இல்லாமை.
03. ஆசிரியர் சேவைக்கு நியமனம் பெறுவதற்கான தகைமைகளை இலகுவாக்கல்.
04. ஆசிரியர் தொடர்பான தொழில்வாண்மை அமைப்புக்கள் இல்லாமை.
05. தொழிலாளிக்குப் பதிலாக, ஊதியம் பெற்றுக்கொள்வதற்காகத் தொழில் புரிகின்ற அரச தொழில் வாண்மையினர் உருவாகின்றனர்.

ஆசிரியர்கள் ஊதியம் அல்லது பொருளாதாரப் பிரதிபலன் அல்லது அதனை இரண்டாம் பட்சமாகக் கொண்டு, தமது சேவையைப் பெறும் மாணவர்களின் முன்னேற்றத்தை முதன்மையாகக் கொண்டு செயற்படுகின்றனர். இதனால் ஆசிரியர்கள் பெற்றார்கள் முன்னிலையில் கௌரவத்துக்கும் அன்புக்கும் உட்படுகின்றனர். எமது சமூக நடைமுறையில் ஆசிரியர் என்பவர் கௌரவத்திற்கும் அன்புக்கும் பாத்திரமாகியவராகவும் நடிபங்குடையவராகவும் விளங்குகின்றனர். ஆயினும் பிற்காலத்தில் பல்வேறுபட்ட காரணங்களின் நிமித்தம் ஆசிரியத் தொழில் வாண்மையின் இயல்புகள் மாறுபட்டு ஆசிரியர் என்பவர் வேறு ஒரு அரச தொழில்வாண்மையினர் மற்றும் ஊதியம் பெறும் உத்தியோகத்தர் என்ற நிலைக்கு ஆளாகின்றார்.

பணத்தை மட்டுமே கருத்திற்கொண்டு பிரத்தியேகக் கற்பித்தலில் ஈடுபடுதல், சுயதொழில் வாண்மையினரைச் சரியான முறையில் செயற்படுத்தாதுவிடல், நிர்வாக தொழில் வாண்மையினரின் நன்மைக்கே உழைப்பவர்களாக செயற்படுதல் போன்ற குறைபாடுகள் தோன்றுகின்றன. இதனாலேயே இலங்கையில் ஆசிரியத் தொழில், சமுதாயத்தின் நன்மதிப்பை இழந்து மிகவும் கீழ்மட்டத்திற்குத் தள்ளப்பட்ட ஒரு தொழிலாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கல்வியின் அவசியம்

விரிவுரையாளர் எம்.ஏ.எம். ஜெலீல்

இன்றைய உலகின் ஆசிரியர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் இதுவரை பெற்றுள்ள ஆசிரியர் கல்வி போதுமானதாக இல்லை. ஆதலால் அவர்கள் புதிய தேடல்களில் ஈடுபட்டுத் தம்மை முன்னேற்றிக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, ஆசிரியர்கள் தற்போது ஆசிரியர் கல்வியைப் பல வழிகளிலும் பெற்று வருகிறார்கள்.

**ஆசிரியர் கல்வி என்பது :**

ஆசிரியர் வாண்மையை அபிவிருத்தி அடையச் செய்தல், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் மேற்கொள்ளல், பாடத்தைத் திட்டமிடுதல், சிறந்த முறையில் பாடத்தைச் செயற்படுத்துதல், கற்றல் வளங்களை உபயோகப்படுத்துதல், பாடசாலை உள்வாரியான, வெளிவாரியான பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்தல், மாணவர்கள் கற்பதற்குரிய சூழலை உருவாக்குதல், தொடர்பாடல் திறன், விளக்கமளிக்கும் திறன், தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு கற்பிக்கும் திறன், ஆய்வு செய்யும் திறன், வகுப்பறைகளின் சிறிய குழுக்களின் கூட்டுறவுக் கற்றல் முறைகளைப் பயன்படுத்தும் திறன், நுண்முறைக் கற்பித்தலை மேற்கொள்ளும் திறன் முதலான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்படுகின்ற கல்வியே ஆசிரிய கல்வியாகும்.

ஆசிரியர் கல்வி பெறாதவர்கள் இன்று கல்வித் துறையில் பாடசாலை வகுப்பறைகளில் ஈடுபடுத்தப்படுவதனால் இலங்கையின் கல்வித் தரம் பின்தங்கி வருவதை நாம் அறியலாம். அரசு இன்றைய கால கட்டத்தில் கல்வித் தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினை இனங்கண்ட காரணத்தினால்தான் ஆசிரியர்கல்வி மீது அதிகளவு அக்கறை செலுத்தி வருகின்றது.

**ஆசிரியர் கல்வியின் வகைகள்:**

1. ஆசிரியர் முன் சேவைக் கல்வி
2. ஆசிரியர் சேவைக் காலப் பயிற்சி

**ஆசிரியர் முன்சேவைக் கல்வி :**

ஆசிரியர் தொழிலுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் பல நிறுவனங்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் கல்வியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் சேவைக் காலப் பயிற்சி :**

ஆசிரியர் சேவையில் இருந்து கொண்டே பெறும் கல்வி இதுவாகும்.

ஆசிரியர் கல்வி வழங்கும் நிறுவனங்கள் :

1. தேசிய கல்விக் கல்லூரிகள்
2. திறந்த பல்கலைக் கழகங்கள்
3. ஆசிரியர் கலாசாலைகள்
4. தேசிய கல்வி நிறுவகம்
5. ஏனைய பல்கலைக் கழகங்கள்.

**ஆசிரியர் சேவைக் காலப் பயிற்சி :**

ஆசிரியர் சேவையில் இருந்து கொண்டே பெறும் கல்வி இதுவாகும்.

ஆசிரியர் கல்வி வழங்கும் நிறுவனங்கள் :

1. தேசிய கல்விக் கல்லூரிகள்
2. திறந்த பல்கலைக் கழகங்கள்
3. ஆசிரியர் கலாசாலைகள்
4. தேசிய கல்வி நிறுவகம்
5. ஏனைய பல்கலைக் கழகங்கள்.

**தேசிய கல்விக் கல்லூரிகள் :**

இலங்கையில் உள்ள தேசிய கல்விக் கல்லூரிகள் பூரணத்துவம் வாய்ந்த மூன்று வருட ஆசிரியர் முன் சேவைப் பயிற்சிகளை அளித்து வருகின்றன. இதன் மூலம் முழுமை பெற்ற ஆசிரியர் பரம்பரை உருவாக்கப்பட்டு இலங்கையின் பல பாகங்களிலும் பணி புரிந்து வருகிறார்கள். இதில் ஒரு சிறப்பு என்னவெனில் கல்லூரியில் வதிவிட வசதியுடன் கூடிய இருவருட ஆசிரியர் கல்விப் பயிற்சியும், பாடசாலைகளில் பெறுகின்ற ஒரு வருட கட்டுறு பயில்வுப் பயிற்சியும் பெற்ற பின்னரே ஆசிரியர் நியமனம் பெறும் வாய்ப்புக் கிடைக்கின்றது. அந்தக் கால கட்டத்தில் அவ்வாசிரியர்கள் உரிய பாடப் பரப்புக்களில் விசேட தேர்ச்சியும், கற்பித்தலில் மிகச் சிறந்த தேர்ச்சியும், ஆய்வுத் தேர்ச்சியும் பெற்றுக் கொள்கிறார்கள்.

**தொடருறு ஆசிரியர் கல்வி :**

இவற்றுக்கு மேலாக தொடருறு ஆசிரியர் கல்வி அமைப்பின் மூலம் பாடசாலைகளில் கற்பிக்கும் பட்டதாரி ஆசரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் என்ற பேதமின்றி எல்லோருக்கும் ஆசிரியர் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்படுகின்றது. இதில் இருவகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு ஓர் உபபீடாதிபதியும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அ) ஒருவார அல்லது இருவார வதிவிடத்துடன் கூடிய ஆசிரியர் கல்வி
ஆ) ஒருநாள் / இருநாள் வருகை தரும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் என்பன வழங்கப்படுகின்றன.

ஏறக்குறைய இன்று பதினேழு கல்விக் கல்லூரிகள் தொடருறு ஆசிரியர் கல்விப் பயிற்சியை அளித்து வருகின்றன. அதே போல இவற்றை விட 83 ஆசிரிய மத்திய நிலையங்கள் தொடருறு ஆசிரியர் கல்வியை வழங்கி வருகின்றன. இப்பயிற்சி நெறியில் பங்குபற்றும் ஆசிரியர்கட்கு ஒரு சிறு கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது. இக்கற்கை நெறிகளில் பின்வரும் பாட விதானங்கள் பின்பற்றப்படுகின்றன.

1. தர மேம்பாட்டுக் கற்கை நெறி
2. தகைமை விருத்திக்கான கற்கை நெறி.
3. மீள் பயிற்சிக் கற்கை நெறி
4. புத்தூக்க செயற்பாட்டுக் கற்கை நெறி

**சேவைக் காலப் பயிற்சியினூடாகப் பின்வரும் நன்மைகளை ஆசிரியர் பெறுவர்**

1. தாம் பெற்ற ஆசிரியக் கல்வியின் பின்னர் எவ்வாறு வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் என்ற நல்லறிவைப் பெறல்.
2. செயன்முறைகளைச் செய்து காட்டுதல்.
3. கற்பித்தல் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்
4. குறிக்கோள்களை நிறைவேற்றும் தன்மையிலான கற்பித்தலை மேற்கொள்ளல்
5. சிறந்த கற்பித்தல் முறைகளைப் பின்பற்றுதல்
6. ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுதல் சம்மந்தமான வாண்மைத் திறன்களைப் பெற்றுக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திறந்த பல்கலைக் கழகம் :**

திறந்த பல்கலைக் கழகம் பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரியர் முன் சேவைக் கல்வியை, இரண்டு வருடங்களுக்கு அளித்து டிப்ளோமா பட்டம் வழங்கிவருகின்றது. அதே வேளை ஆசிரியர் சேவையில் உள்ள பட்டம் பெற்ற ஆசிரியர்கட்கு, இரண்டு வருட ஆசிரியர் கல்வி அளித்து டிப்ளோமா பட்டம் வழங்கி வருகின்றது.

ஏனைய பல்கலைக் கழகங்கள் சிலவும் பட்டதாரி ஆசிரியர்கட்கு இரண்டு வருட ஆசிரியர் கல்விப் பயிற்சி அளித்து டிப்ளோமாப் பட்டம் அளித்து வருகின்றன.

**தேசிய கல்வி நிறுவகம் :**

இது நான்கு வகையான ஆசிரியர் கல்விப் பயிற்சியை அளித்து வருகின்றது.

1. பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு மூன்று வருட ஆசிரியக் கல்வி வழங்கி (BEd.) பட்டம் வழங்குதல்

2. பட்டம் பெற்ற ஆசிரியர்கட்கு இரண்டு வருட ஆசிரியர் கல்வி வழங்கி டிப்ளோமா பட்டத்தை வழங்குகிறது.

3. பட்டத்துடன் கல்வி டிப்ளோமாத் தராதரம் பெற்றவர்கட்கு இரண்டு வருடப் பயிற்சி வழங்கி (MEd.) பட்டம் வழங்குதல்.

4. அதிபர்கள், விரிவுரையாளர்கள், கல்வி நிருவாக சேவையில் உள்ளவர்கள் ஆகியோருக்கு ஒரு வருட முகாமைக் கல்விப் பயிற்சி அளித்து வருகின்றது. இதுவும் ஆசிரியர் கல்வியின் ஒரு வகையேயாகும். எனவே தேசிய கல்வி நிறுவகமும் சேவைக் காலப் பயிற்சி வழங்கும் நிறுவனம் ஆகும்.

**ஆசிரியர் கலாசாலைகள் :**

சேவைக் காலப் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுள் ஆசிரியர் கலாசாலைகள் பாடசாலைகளில் கற்பிக்கும் தராதரப் பத்திரம் அற்ற ஆசிரியர்களுக்கு இரண்டு வருட உள்ளகப் பயிற்சி அளித்து, பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கி வருகின்றன.

அட்டாளைச்சேனை ஆசிரியர் காலாசாலை
பேராதனை ஆசிரியர் கலாசாலை
மஹரகம ஆசிரியர் கலாசாலை
மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை

போன்றவை இப்பணியில் ஈடுபட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைத் திட்டமும் ஆசிரியர் கல்வியும் :**

மேற்குறிப்பிட்ட ஆசிரியர் கல்விக்குரிய பாட விதானங்களைப் பின்வரும் நிறுவனங்கள் தயாரித்து மேற்பார்வை செய்து வருகின்றன.

1. கல்வி அமைச்சு
2. தேசிய கல்வி நிறுவகம்
3. திறந்த பல்கலைக் கழகம்
4. G.T.Z நிறுவனம்

இவற்றின் மூலம் பாடவிதானம் தயார் செய்யப்பட்டு காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் கல்வியில் ஆரம்பக் கல்வி சம்பந்தமான கலைத்திட்டம் தேசிய கல்வி நிறுவகத்தினாலும், G.T.Z. நிறுவனத்தினாலும் திறந்த பல்கலைக் கழகத்தினாலும் சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**கல்விமாணிக் கற்கை நெறிக்குரிய கலைத்திட்டம் :**

இது ஐந்து பிரதான பிரிவுகளைக் கொண்டது.

1. தொழில்சார் பாடக்கூறு (275 மணி)
கல்வி உளவியல், கல்விக் கோட்பாடுகள்; பிரச்சினைகள்; போக்குகள், கல்வி அளவீடு, மதிப்பீடு ஆய்வுமுறைகள்.

2. தெரிவுப் பாடக் கூறு (50 மணி)

(i) பாடசாலை ஒழுங்கமைப்பும் முகாமைத்துவமும்
அல்லது

(ii) கல்வி வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்.
கணிதம்/விஞ்ஞானம்/சமூகக்கல்வி ஆகிய பாடங்களுடன் தொடர்பான விசேட கற்பித்தல் முறை
அல்லது
ஆசிரியர் கல்வியும், கலைத்திட்ட விருத்தியும் (பிரிவு ii இல் ஏதாவது ஒன்று மட்டும் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொதுப் பாடக் கூறு (225 மணி)
மொழித் திறன் (தமிழ்/ஆங்கிலம்/சிங்களம்)
கல்வித் தொழில் நுட்பமும் தகவல் விஞ்ஞானமும்.
அழகியல் கலை (சித்திரம்/நடனம்/சங்கீதம்/நாடகமும் அரங்கியலும்)ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு.

4. சிறப்புப் பாடக் கூறு (300 மணி)
ஆரம்பக் கல்வி - தாய்மொழி
ஆரம்பக் கல்வி - கணிதம்
சுற்றாடலும் ஆரம்ப விஞ்ஞானமும்
சுகாதாரமும், உடற்கல்வியும்
அழகியலும் ஆக்கத்திறன் செயற்பாடுகளும்
சமயமும் விழுமியக் கல்வியும்
(புதிய சீர்திருத்தங்களுக்கேற்ப இப்பாடங்களின் உள்ளடக்கம் மாற்றப்பட்டுள்ளது)

5. செய்முறை பாடக் கூறு (250 மணி)
ஒப்படை
கற்பித்தற் பிரயோகம் (Teaching Practice)
செயல்சார் ஆய்வுச் செயற்றிட்டம்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

ஆசிரிய மாணவர்களை மையமாக் கொண்ட கற்றல்- கற்பித்தல் நுட்பமுறைகள் ஊடாகப் பாடங்கள் முன்வைக்கப்படுகின்றன.

உதாரணம் : விரிவுரை, கலந்துரையாடல், கருத்தரங்கு, விடய ஆய்வு பாத்திரமேற்றல் (Role) செயற்றிட்டம் என்பன.

ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் சிறப்பான கற்பித்தலை மேற் கொண்டு சிறந்த மாணவ பரம்பரையை உருவாக்கி, சிறந்த சமூகம், சிறந்த நாடு, நல்ல உலகம் என்பவற்றை உருவாக்கி, உலகம் ஒரு குடும்பமாக வாழ்ந்து, உலகில் அமைதியையும், சாந்தியையும் நிலைநாட்டுவதற்கு ஆசிரியர் கல்வி உறுதுணை புரிவதாக அமைய வேண்டும்.

அத்துடன் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், தகவல் தொழில்நுட்ப அறிவு, உலகமயமாதற் கொள்கை என்பவற்றிற்குப் பொருத்தமாக கணணி மயப் படுத்தப்பட்ட கல்வியாக அமைய வேண்டும். இவ்வாசிரியர் கல்வி உண்மை யாகவே, மாணவர் அபிவிருத்தி நோக்கி பயன்படுத்தக் கூடிய கல்வியாக அமைய வேண்டும். அப்போதுதான் இக்கல்வியின் மூலம் ஆகக் கூடுதலான பயனைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியருக்கு அழகியற் கல்வி ஏன் அவசியம்?

விரிவுரையாளர் SMA. ஜிப்ரி.

**சித்திரக் கலைக் கல்வியால் கிடைக்கும் நன்மைகள் :**

இலங்கையின் கல்வி வரலாற்றில் ஆரம்பகாலம் தொட்டு அழகியற்கலை பாடங்களின் வரிசையில் சித்திரம், சங்கீதம், நடனம் ஆகியன இன்றுவரை அழியாத இடத்தைப் பெறுகின்றன. மாணவர்களின் உள்ளத்தில் இரசிப்புத் தன்மை (ரசனை) யை வளர்ப்பதற்கு அழகியற்கலைப் பாடங்கள் வாயிலாக இயற்றப்படுகின்ற பணிகள் அளப்பரியவை.

கல்விப் பணியில் கணிதம், மொழி மற்றும் பாடங்களின்போது அடைகின்ற மனக்களைப்பை மாற்றி உற்சாகத்தையும் மனமகிழ்ச்சியையும் அளிப்பதுடன் மாணவர்கள் உள வளர்ச்சியில் நிறைவான பயனை அளிக்க வல்லனவாக அழகியற்கலைப் பாடங்கள் திகழ்கின்றன.

1980 ஆம் ஆண்டு முதல் சித்திரம் ஒரு தனிப்பாடமாகப் போதிக்கப் பட்டுவந்துள்ளமையை அவதானிக்கும் போது இன்றைய காலகட்டத்தில் சித்திரக்கலையின் வளர்ச்சியையும் வளத்தையும் கருதிய சிந்தனை அவசியம் எனத் தோன்றுகின்றது. சித்திரக்கலை என்பது மனிதனில் பொதிந்துள்ள ஓர் இயல்பான திறமையே என்று கூறப்படுகின்றது. வரைகின்ற முயற்சியின் விளைவாக எமது மாணவர்கள் பெறக்கூடிய வளர்ச்சியும் மகிழ்ச்சியும் அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் நயம் செறிந்த பயன்களை நல்கத் தகுந்தனவாக அமைகின்றன.

பறவைகள் மரக்கிளைகளில் கட்டுகின்ற அதன் கூடுகளை மெருகு பெற அமைத்துக் கொள்கின்றன. இதே இயல்பினை ஒத்ததாக குழந்தைகளின் வரைதல் இயல்பு காணப்படுகின்றது. எந்த ஒரு பறவையும் அதன் இயல்புகளுக்கமைய பிரயோசனமற்ற சிறிய தடிகள், தும்புகள் என்பவற்றைக் கொண்டு அவை தத்தமது வாழ்விடங்களை (கூடுகளை)ப் பயன்தரும் வகையில் அமைத்துக்கொள்வது போன்று பள்ளிப் பருவத்தில் பிஞ்சுக் கரங்களின் நோக்கமற்ற கிறுக்கல் முயற்சிகளிலிருந்துதான் உலகளாவிய புகழ்பெற்ற மகான்களது வாழ்க்கைகளும் மலர்ச்சி பெற்றுள்ளன என்ற உண்மையை மறுப்பதற்கில்லை.

நோக்கமற்ற கிறுக்கல் என்பதுதான் 3 வயது தொடக்கம் 6 வயதுக்குட்பட்ட குழந்தையின் கல்விசார் ஆரம்பத் தொழிற்பாடு. இதுவே வரைதலின் முதற்படியாகும். மொழியைப் பொறுத்த வரையில் எழுத்தும் இதிலிருந்துதான் ஆரம்பமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி என்றால் என்னவென்று அறியப்படாத கால கட்டத்தில் பூர்வீகக் குடிகள் சித்திரங்களின் வாயிலாகத்தான் தனது உள்ளக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர் என்பது வரலாற்றுச் சான்றாகும். எந்தவித பாகுபாடும் இன்றி யாரிடத்திலும் பொதுப்பட்ட தன்மையில் எல்லோராலும் இலகுவில் அனுபவித்து உணரக்கூடியனதாக சித்திரக்கலை விளங்குகின்றது.

மொழியை அறிவதில் வரிவடிவமாகிய எழுத்துப் பயிற்சியை குழந்தைகள் வரைதல் முயற்சியின் வாயிலாக பெறச் செய்வதே இலகுவான வழியாகும். அவ்வாறின்றி ஆரம்பத்திலேயே எழுத்துக்களை எழுதப் பணிப்பது அவர்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுப்பதுடன் பள்ளிப் பருவத்தில் ஒருவித பயத்தையும் மனவெறுப்பையும் ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். அம்மா, அப்பா, படம், பட்டம் ஆகிய சொற்களை எழுதுவதாக இருப்பினும் எழுத்துப் பயிற்சி சார்ந்த உபகரணங்களைப் பாவித்து அறியாத குழந்தைகள் எழுதுகோலையே முறையாகப் பிடிப்பதற்கு பயிற்சி பெறாதவிடத்து அது சாத்தியமாகாது. எனவேதான் வரைதல் தொழிற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடச் செய்வதற்கான கவர்ச்சிகரமான சூழலை வகுப்பறையில் ஏற்படுத்தி வசதியான உபகரணங்களை பெறுவதற்கு வழியமைத்து நிறங்களைக் கொண்டு வடியுருவங்களை நிரப்புதல், நிறம் தீட்டுதல், அவர்களின் இயல்புக்கேற்ற வகையில் இயங்கச் செய்வதன் மூலமாக அறிவு தேடலுக்கான ஆற்றலையும், கைப்பயிற்சியையும் கவர்ச்சிகரமான வகையில் முறைப்படுத்தல் அவசியமாகின்றது.

பிள்ளைகளின் தன்மைக்கேற்ப அவர்களுக்குச் சரியான வழிகாட்டலை அமைத்துக் கொடுப்பதன் மூலமாகவும், அவர்கள் வரையும் சித்திரத்தின் மூலம் பறவைகள், மிருகங்கள், மலர்ச் செடிகள் ஆகியவற்றை இலகுவான முறையில் அமைத்துக்கொள்வதற்கு வழிகாட்டியாகவும் அமைத்துக் கொடுக்கும் போது பிள்ளைகள் ஆசிரியரில் மையல் கொண்டு அவர்களைப் போன்று தாமும் வரையவேண்டும் என்றும் வரைவதற்கு முயற்சிகளை மேற்கொள்வர். குறிப்பிட்ட படங்களை வரையும் நுட்ப முறைகளை ஆசிரியர் பிள்ளைகளுக்கு வரைந்து காட்டும்போது வரைதலில் மேலும் ஈடுபாடு காட்டி மேலும் பயிற்சியினைப் பெற்றுக்கொள்ள வழி ஏற்படும்.

உயர்வகுப்புகளில் கேத்திர கணிதம், பௌதீகம், இரசாயனம், புவியியல் ஆகிய பாடங்களுடன் தொடர்பான வரைதல் பணிகளுக்கு அவர்களது ஆரம்ப வகுப்புக்களில் இருந்து ஆர்வமிக்க வரைதல் தொழிற்பாடுகள் பேணி வளர்க்கப்படுவது அவசியமாகும். வரைதல் பயிற்சிகளின் மூலம் எண், மொழி சார்ந்த எண்ணக்கரு வளர்ச்சியை இலகுவாகப் பெறக்கூடிய வகையில் ஆரம்ப வகுப்புக்களில் கற்பிப்பதற்கான ஒழுங்கு முறைகளை ஆசிரியர்கள் வகுத்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் அடுத்தடுத்த வகுப்புக்களில் இடரின்றி வரைதலுடன் ஏனைய பாடங்களையும் அவர்கள் விரும்புகின்ற மனநிலையைத் தோற்றுவிப்பதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை தமது புலக்காட்சி, புலன் உணர்ச்சி வாயிலாகப் பெறுகின்ற அனுபவங்கள் சிறிது காலத்தில் அவர்கள் வரையும் சித்திரம் சார்ந்த மனக்கிளர்ச்சியின் காரணமாக அந்தப் பிஞ்சுக் கரங்களின் மகோன்னத சித்திரமாக உருப்பெறுவதை ஆசிரியர்கள் தமது அனுபவ வாயிலாக அனேகப் பொழுதுகளில் அவதானிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவை செம்மை சார்ந்தனவாகவோ பூரணத்துவம் பெற்றனவாகவோ இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அரைகுறையான அவர்களது தொழிற்பாடுகளை முழுமைபெறச் செய்து ஒழுங்கு முறையான ஒரு சித்திரமாக ஆசிரியர் அமைத்து உதவும் போது மாணவர்களும் இயல்பாகவே தமது முயற்சிகளில் தன்னம்பிக்கையும், மேலும் வரைய வேண்டும் என்ற பேரார்வமும் ஏற்படும். இதன் காரணமாக அவர்கள் கல்வியில் விருப்பையும் கற்றல் விளைவுகளில் வெற்றியையும் அடைவதற்கு வழியேற்படும்.

கல்விப்பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் மாணவரிடத்தில் கொண்டுள்ள அன்பு தொடர்பு அவர்களை உற்சாகப் படுத்துவதிலும் விளங்கிக் கொள்வதிலும் கையாளுகின்ற சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்ட பொதுப்பட்ட தன்மையிலிருந்துதான் குழந்தைகளின் இயக்கம் சிறப்படைகின்றது. ஆகையினால் பாடசாலைகளில் சிறிய குழந்தைகளை வழிநடத்துகின்ற ஆசிரியர்கள் தனது பொறுப்பில் உள்ள குழந்தைகளின் கருத்துக்களையும் பாவனைகளையும் உணர்ச்சிகளையும் அறிந்து கொள்வதில் ஆர்வமுடையவர்களாக விளங்கவேண்டும். அவ்வாறின்றேல் அவர்களிடம் மறைந்து கிடக்கின்ற வரைதல் வல்லமையை ஒளிபெறச் செய்வது இயலாது போகின்ற துர்ப்பாக்கிய நிலை ஒரு சமூகத்தின் வீழ்ச்சிக்கே வழிவகுப்பதாக அமையும்.

ஓவியத்துறையின் வல்லுனர்கள் தம்மை சூழவுள்ள பொருட்களின் இசைவு, ஒழுங்கு, தொடர்புகள் யாவற்றையும் முறையாக அறிந்திருக்கலாம். ஆனால் இந்த அடிப்படையில் ஆழமான சிந்தனை ஆரம்பத்தில் அவசியமெனக் கூறமுடியாது. வரைதற்கலை என்பது மனித வாழ்வில் வாய்க்கப்பெற்ற ஒரு கொடையாகக் கணிக்கப்படுகின்றபோது இதை வளர்ப்பதற்கு ஆசிரியர் மாணவரிடத்திலே மகிழ்ச்சிகரமான உறவு அவசியமாகின்றது. வகுப்பறையில் இத்தகைய திருப்திகரமான நிலை இருந்தாலன்றி இக்கலை வளர முடியாது. அன்பும் மகிழ்ச்சியும் கலந்த கவர்ச்சிகரமான சூழ்நிலையிலேதான் குழந்தையின் சித்திரம் வளரும். ஆசிரியர்களின் கற்பனா சக்தியும் அதற்கு அவசியமாகின்றது. எனவே சித்திரக்கலை மாணவர் உள்ளத்தில் வேரூன்றச் செய்வதன் மூலம் அவர்களது அறிவு வளர்ச்சிக்கான வழிகளைக் கையாள்வதற்கு ஆசிரியர்களுக்கு அழகியற் கலை சார்ந்த பயிற்சி அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூத்தும் பாரம்பரியங்களும்



விரிவுரையாளர் நா. நாகேந்திரன்

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர் மத்தியிலே பறை மேளக் கூத்து, வசந்தன் கூத்து, தென் மோடிக் கூத்து, வடமோடிக் கூத்து போன்றன நாடக வடிவங்களாகும். ஏனைய கூத்துக்களை விட வடமோடி, தென்மோடி கூத்துக்கள் மிக வளர்ச்சி பெற்ற நாடக வடிவங்களாகும். இத்தகைய கூத்துக்கள் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் ஆடப்பட்டாலும், ஆடலும் பாடலும் தனித்துவமான மேடையமைப்பும் பாரம்பரிய முழுமைகளை கிழக்கு மாகாண கூத்துக்களே கொண்டுள்ளன.

எமது பிரதேசத்திலே முன்னைய காலங்களில் 17ம் 18ம் போர் 13ம் 14ம் போர் கட்டங்களை எடுத்துக் காட்டும் கூத்துக்கள் பொழுதாகி ஆடத் தொடங்கினால் விடிய விடிய ஆடுகிற தன்மையையும் காணலாம். இவ்வாறு ஆடப்படுகின்ற கூத்துக்கள் வடமோடி, தென்மோடி பாங்கிலே மேற்கொள்ளப் பட்டிருந்தன.

வடமோடியினையும் தென் மோடியினையும் வேறுபடுத்திக் காட்டுவதில் தாளங்களும் ஆட்ட முறைகளும் முக்கியமானதொரு அம்சமாகும். தாளத்துக் கேற்பக் காலை வைத்து ஆடுவதில் இரு மோடிகளுக்கிடையில் வித்தியாசம் காணப்படுகின்றது. வடமோடியில் பாதம் முழுவதும் நிலத்தில் பதியும் படி ஆடுதல் வேண்டும். இவ்வடமோடிக் கூத்துக்கள் ஈழத்தில் ஏனைய பகுதிகளில் ஆடப்பட்டாலும் தனித்துவம் கொண்டவையாக மட்டக்களப்பிலேதான் அமைகின்றது. இருப்பினும் இப்பிரதேசத்திலும் ஆடப்பட்டதும் ஆடப்படுகின்ற தன்மையையும் காணலாம். அதாவது ஆட்டக் கோலம் பாடலமைப்பு மேடையமைப்பு ஒப்பனைகள் போன்றவைகள் பழைமையைப் பேணுவதினாலாகும். மற்றும் விஷானம் நாலடி, பாச்சல் , பொடியடி ரத்து போன்ற ஆட்டவகைகள் இவற்றின் தனித்துவமாகும்.

தென்மோடி கூத்துக்களை எடுத்துக்கொண்டால் மட்டக்களப்பு பிரதேசத்திலே 34 கூத்துக்கள் ஆடப்பட்டன என பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் கணக்கிட்டுள்ளார்கள். இத்தகைய தென்மோடிக் கூத்தில் தனித்துவம் எனும் போது வடமோடியில் இருந்து முழுக்க ஆட்டக் கோலமும் தாளமும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றன. தென்மோடிக் கூத்துக்கள் எமது பிரதேசத்தில் வழக்கில் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தென்மோடிக் கூத்துக்களில் இடம்பெறும் தாளங்கள் வடமோடியைவிட நுணுக்கமானவையாகும். சு. வித்தியானந்தன் குறிப்பிடுகையில் நுணுக்கம் மாத்திரம் அன்றி அலங்காரமான ஆட்டக் கோலங்களின் வேறுபாடுகள் இக்கூத்தில் இல்லை. எனவே தென் மோடியின் தனித்துவமான ஆட்டம் குறிப்பிடப்பட்ட அம்சங்கள் பொருத்தப்பாடாக அமைந்து காணப்படுகின்றது. மற்றும் உலா, ஒய்யாரம், சீரளி, குந்தடி, கால் எறிதல் என்பன இவற்றின் தனித்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது பிரதேசங்களிலே கூத்துக்களை ஆடுவதற்கு முன்னர் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிந்துகொள்வது தற்காலத்தில் அவசியமாகின்றது. அவைகள்.

1. கூத்து தயாரிக்கும் முறைகள்
2. சட்டம் கொடுத்தல்
3. கூத்துப் பழக ஆரம்பித்தல்
4. சதங்கை கட்டுதல்
5. கிழமைக் கூத்து
6. அடுக்குப் பார்த்தல்
7. அரங்கேற்றம்
8. அரங்கேற்றத்தின்போது நடக்கும் நிகழ்வுகள்
9. வீட்டுக்கு வீடு ஆடுதல்
10. கூத்தும் சமூகமும்.

**கூத்து தயாரிக்கும் முறை :**

வடமோடிக் கூத்தை அல்லது தென்மோடிக் கூத்தை எடுத்துக் கொண்டால் இவை ஒரு தயாரிப்பாளரினால் அல்லது அண்ணாவியாரினால் ஏதாவது ஒரு கதையை அதாவது மகாபாரதம், இராமாயணம், இதிகாசம் போன்றவற்றிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட கூத்துக்குப் பாடலுக்கான மெட்டு அமைத்து பாடல்களை ஒழுங்குபடுத்தி தாளம் அமைத்து வசனம், விளக்கம் போன்றவைகளை ஒழுங்கமைத்து பின்னர் அக்கதையை (கூத்தை) பழகுவதற்குத் தயாராகுவதைக் குறிப்பிடலாம்.

**சட்டம் கொடுத்தல்**

கூத்தாட விரும்பும் இளைஞர்களின் குரல்வளம், தோற்றப் பொலிவினைப் பார்த்து அண்ணாவியார் ஊர்மக்கள் முன்னிலையில் கூத்தரைத் தெரிவுசெய்வார். இது ஒரு சடங்காகவே இடம்பெறுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட கூத்தருக்கு அவர் ஆடவேண்டிய பாத்திரத்தின் பெயரை எழுதிக் கொடுத்தலே சட்டம் கொடுத்தலாகும். இது ஊர் மக்களை ஒன்றிணைக்கும் ஒரு பெரிய விழாவாகவே இடம் பெறுகின்றது.

**கூத்துப் பழக ஆரம்பித்தல்**

கூத்துப் பழக ஆரம்பிக்கும்போது ஒரு நல்ல தினத்தில் ஆரம்பிப்பார்கள். இவற்றில் எமது சமயரீதியான பாரம்பரிய முறைகளைக் கொண்டு ஆலயத்திற்குச் சென்று கற்பூரம் எரித்து தேங்காய் உடைத்து, தேவாரம் பாடி பின்னர் தமது கூத்து பயிலும் இடத்துக்கு அதாவது களரிக்கு வந்து அங்கு இறைவனுக்கு வணக்கம் செலுத்தும்போது கூத்து பாடல் அமைப்பிலே பாடல்களைப் பாடுவார்கள். இவை காப்பு விருத்தம் என அழைக்கப்படுகின்றது. காப்பு என்பது பாதுகாத்தல் காப்புச் செய்யுள் என அழைக்கப்படும். நாட்டுக் கூத்து ''காப்பு'' அமைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவன் நாட்டுக் கூத்தின் பெயரை வைத்தே முதல் பாட்டை வெண்பாவிலோ எண்சீர் விருந்திலோ அல்லது அறுசீர் விருந்திலோ பாடுவர். இவை கூத்து ஆட ஆரம்பிக்கும் போது நடைபெறும் நிகழ்வாகும்.

### சதங்கை கட்டுதல் / அணிதல்

சதங்கை அணிதல் கூத்தின் முக்கிய அம்சமாகும். முதலில் சதங்கை அணிந்து கொண்டு நடப்பதற்குக் கூத்துப் பயிற்சி பெறவேண்டும். ஆடுவதற்கு இன்னும் பயிற்சி தேவை. இதனால் சதங்கை அணிவதை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடுவர். பழகத் தொடங்கி மூன்று, நான்கு மாதங்களுக்குப் பின்னர்தான் இவ்விழா நடைபெறும். அண்ணாவியாரோ சதங்கையைக் கூத்தரின் காலிலே அணிவிப்பார். இது ஓர் சமயச் சடங்கு போல நிகழ்கிறது கூத்தாடுபவர் தமது உறவினர் அனைவருக்கும் செய்தியோ அழைப்போ அனுப்புவர். கூத்தரின் உறவினர்கள் அனைவரும், இவ்விழாவில் கலந்து கொள்வர். இதனால் உறவு முறைகள் மேலும் வலுப்பெறுகின்றன .

### கிழமைக் கூத்து

சதங்கை அணிந்து கிழமைக்கு ஒரு தடவை பகல் முழுவதும் ஆடப்படும் கூத்து கிழமைக் கூத்து என அழைக்கப்படுகிறது. உள்ளூரவராலும் வெளியூரவராலும் இதில் கலந்து கொள்வதற்கென வந்து பின்பாட்டுப் பாடி கூத்தரை ஊக்குவித்து பின்னேரம் அல்லது மறுநாள் மீண்டும் செல்வர்.

### அடுக்குப் பார்த்தல்

வெள்ளை உடுப்பு அணிந்த நிலையில் ஒரு இரவு முழுவதும் ஒத்திகை பார்த்தலே அடுக்குப் பார்த்தல் என அழைக்கப்படுகின்றது. ஆயத்தம் செய்தல் என்பது இதன் பொருளாகும். அடுக்குப் பார்த்தலின்போது சில பிரமுகர்கள் கூத்தாடி அனுபவம் பெற்றவர்கள் அண்ணாவியார்களுக்கு நண்பர்களான சகல அண்ணாவிமார்கள் வந்திருந்து கூத்துப் பார்த்து சில அபிப்பிராயங்களை தெரிவிப்பார்கள்.

### அரங்கேற்றம்

அலங்கார உடை அணிந்து உயர்ந்த அலங்காரமான மேடையில் விடியவிடிய ஆடப்படுவதே அரங்கேற்றமாகும். இவ்வரங்கேற்றம் கூத்தினை ஆடும் ஊரின் அல்லது சாதியின் பெருவிழாவாக அமைகின்றது. மேடை அமைப்பதிலும் இடத்தை அலங்கரிப்பதிலும் ஊரில் உள்ளோர் அழைப்பின்றி வந்து தம் உடல் உழைப்பை நல்குவார்கள். வெளியூரார் வரவால் ஊர் விழாக்கோலம் பூண்டிருக்கும். எல்லா வீடுகளிலும் வருகை தரும் இவ் உறவினர்களுக்கு விருந்துகள் நடைபெறுகின்றது. அயலூர் உறவினர்கள் சதங்கை அணிதலின் போது வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பித்தது போன்று இங்கு வந்து சிறப்பிப்பார்கள். குடிமக்கள் (பறயர், வண்ணர், அம்பட்டர்) தம் கடமைகளில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுவர். மேலும், ஊரில் உள்ள வியாபாரிகள் மந்திவாதிகள் அனைவரும் இவ்விழாவில் அதிக பயனடைகின்றனர். இது கிராம விழாவாகவே நடைபெறுவது போற்றத்தக்க நடவடிக்கையாகும்.

## அரங்கேற்றத்தின்போது நடக்கும் நிகழ்வுகள்

அரங்கேற்றத்திற்காக கூத்தர் தமது வெளியில் உள்ள உறவினர்களுக்கு அறிவித்ததை அடுத்து அவர்கள் வருகை தந்து இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள். கூத்தர் கூத்து ஆடுவதற்காக களறிக்கும், கூத்தர் வருகை தரும் போது அவரின் உறவினர்கள் களறிக்குள்ளும் சென்று கூத்தரின் முன்னால் மத்தாப்பு அல்லது பகல் வர்த்தி கொழுத்தி அவை எரிந்து முடியும் வரை பிடித்திருப்பர். சிலர் மாலை அணிவிப்பார்கள். சிலர் தோழில் சால்வை போடுவார்கள். பணம் வழங்கியும் கூத்து நிகழ்வைச் சிறப்பிப்பார்கள். இவ்வாறான நிகழ்வு இடம்பெறும்போது இக்கூத்து சமூகத்துக்கிடையே சமூக உறவுகளை வளர்த்துள்ளது. பல காலமாக பிரிந்திருக்கும் குடும்பங்கள் இடையே ஒற்றுமையையும் ஏற்படுத்தும் பாலமாக திகழ்கின்றது.

மேலும் கூத்தாடி முடிவடைந்ததும் இறுதியில் களறி கும்பிடும் மரபு வழக்கமாக உள்ளது. பாடல் முடிவடைந்ததும் அண்ணாவியார் மத்தளத்தினால் தொட்டுக் கும்பிடு என்று மூன்றுமுறை அடிப்பார். கூத்தர் மூன்று முறை நிலத்தை தொட்டு கும்பிட்டபின் மத்தளத்தைத் தொட்டு கும்பிடுவர். பின் அண்ணாவியாரின் ஆசி பெற்றுக்கொள்வர்.

## வீட்டுக்கு வீடு ஆடுதல்

கூத்து அரங்கேற்றம் முடிவடைந்ததும் காலையில் இக்கூத்துக்கள் வீட்டுக்கு வீடு சென்று பாடி ஆடும் மரபு எமது பிரதேசத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது இவ்வாறு ஆடுவதால் சமூக தேவைகள் நிறைவேற்றப் படுகின்றன. அவையாவன :

* கூத்தைப் பார்க்க முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தல்
* குடும்பச் சண்டைகள் தீர்தல்
* கிராமத்தோடு ஒட்டாமல் இருப்பவர்களின் வீட்டுக்கு ஆடப் போவதுடன் ஊர் செயற்பாடுகளில் அவரை இழுத்தல்
* ஊர் மக்கள் அளிக்கும் உணவு குளிர்பானங்களைக் கூத்தர் நேரடியாகப் பெறுவர்
* அண்ணாவியாருக்கு மேலதிகப் பணம் சேருதல்

வீட்டுக்கு வீடு ஆடுதல் இன்னுமோர் சமூகக் காரணம் உண்டு. சமூகத்தில் அல்லது மேல் நிலையில் இருந்து கீழ் நிலைவரை வரிசைக் கிரமத்தில் சமூக அதிகார அமைவின் படியே வீட்டைத் தெரிவுசெய்து கூத்தர் ஆடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணங்குகின்றோம்

திரு.சா.தவயோகன் (விடுகை வருடம்)

வந்த
இடம்!
எந்த
இடம்?
வளையும்
வயதிலும்
வாண்மையை
உயர்த்த
வாய்த்த
கல்வியை
வளமாய்க்
கற்று
விளைவு
காண
விழுச்சீர்
கொண்ட
இடம்

❖ ❖ ❖

இங்கே !
காலத்தைக்
கனியாக்கி
கல்விமாணித்
துறைநோக்கி
கதைகள்
தரும்
தத்துவங்கள்
உள்ளம்
தொடும்
உளவியல்கள்
உந்தக்
கற்றோம்
கருக்கிடை
கூறும்
கல்வி
வழிகாட்டலும்,
கணிப்புலகின்
கணித்தலுடன்
கலைத்திட்டமும்
கண்டு,
கனிமொழி
கற்று
நயந்திடும்
நாடகக்
கலைகளையும்
களிப்புடன்
கற்றோம்.

❖ ❖ ❖

அளவுகடந்து
அளவீடும்
மதிப்பீடும்,
கல்வித்
தொழில் நுட்பமும்
காண
விளைந்தோம்.
உள்ளம்
தொடும்
உகந்த
கல்வியை
உதாசீனமாய்
நாம்
கற்றிட,
சீரிய
கல்வியைச்
செம்மையாய்ப்
புகட்டிய,
சித்தும்
சமத்தும்
கூராய்க்காணும்
முதுவாய்
முதல்வோரே
உங்களைச்
சிரம்
தாழ்த்துகின்றோம்

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUT GOING STUDENT TEACHERS

BEd. 2002 / 2004 (Primary)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றையக் குழந்தைகளின் கல்வியும் பெற்றோர்களும்

திரு.த.பூவேந்திரன் (விடுகை வருடம்)

தமது குழந்தைகளைப் படசாலைக்கு அனுப்பிவிட்டு ஆசிரியர்களிடமிருந்து முழுமையான சேவையை எதிர்நோக்கியிருக்கும் பெற்றோர், தமது குழந்தைகளைப் பற்றிய பெருங் கனவுகளில் மூழ்கியிருக்கின்றனர். தம்மால் அடைய முடியாத, தமக்குக் கிடைக்காத வாழ்வு தமது குழந்தைகளுக்குக் கிடைக்கவேண்டும் என்பது அவர்களது எதிர்பார்ப்பாகும். இதை ஏக்கமாகவும் குறிப்பிடலாம். தமது ஆசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் அந்தச் சின்னஞ்சிறு குழந்தைகளின் தலைகளிலே ஏற்றிவிட்டு அவற்றை அடைவதில் கல்விக்கர்த்தாவான ஆசிரியர்களை நெருக்கடிக்குள்ளாக்குகின்றனர்.

தமது குழந்தை மிகச் சிறிய வயதிலே கல்வி கற்க வேண்டும், மிக விரைவில் உயர் கல்வி முடித்து தமது எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கும் பெற்றோர் இந்த அடைய முடியாததொன்றிற்காக சின்னஞ்சிறு குழந்தைகளைச் சிறுவர் முன் பள்ளிகளுக்கும் பிரத்தியேக வகுப்புக்களுக்கும் அனுப்பி அளவுக்கு மீறிய பாரத்தை ஏற்றிவிடுகின்றனர். அளவுக்கு மீறிய ஆசையின் விளைவு இதுவாகும். முதிர்ச்சியடையாத குழந்தைகளுக்குக் கொடுக்கும் அளவிற்கு அதிகமான பாரத்தினால் காலம் செல்லச் செல்லக் கல்வியில் நாட்டம் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். உயர் கல்வியில் இவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறவும் தவறுகின்றனர். குழந்தைப் பாடசாலைகள் பல நமது பிரதேசத்தில் மொண்டிசோரி அம்மையாரின் கருத்துகளுக்கமைவாக இல்லாதிருப்பதே இதற்குக் காரணம் எனலாம். வர்த்தக நோக்கம் கொண்ட பல கல்வி நிறுவனங்கள் குழந்தைகளின் உடல், உள வளர்ச்சியைக் கவனிப்பதில்லை. இச்சந்தர்ப்பத்தில் மொண்டிசோரி அம்மையாரின் கருத்தை நோக்கினால் 'அடைய முடியாத ஒன்றிற்காகப் பிள்ளைகளைத் துன்புறுத்த வேண்டாம்" என்பதில் பல விடயங்கள் தெளிவாகின்றது. அத்துடன் ஆங்கில நாட்டு கல்வியியலாளரான சேர். ஜோன் அடம்ஸ் என்பவரது கருத்தும் சிந்திக்கத்தக்கது. ''ஜோனுக்கு லத்தீன் கற்பிப்பதற்கு ஆசிரியர் லத்தீன் மொழியைத் தெரிந்தவராக இருந்தால் மட்டும் போதாது, ஜோனைப் பற்றியும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்".

மூன்று வயதுக் குழந்தைகளைப் பற்றிப் பெற்றோரோ, பிரத்தியேக வகுப்பு ஆசிரியரோ கவலைப்படுவதில்லை. அவர்களது கவனம், குழந்தை மிக வேகமாகக் கற்றுத் தாம் நினைத்ததை நடத்தி விடவேண்டும் என்பதேயாகும். தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளை ஆரம்பப் பாடசாலைகளில் சேர்க்கும் பெற்றோர் அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களிடம் இந்த வேகத்தையே எதிர்பார்க்கின்றனர். பெற்றோர்களது வேகத்திற்கு ஆசிரியர்களால் ஈடுகொடுக்க முடியுமா? முடியாது என்பதே சரியானது. இதனால் ஏற்படப்போவது யாது? முரண்பாடாகும்.

கல்வி நடவடிக்கைகளில் ஈடுபாட்டைக் காட்டும் இருவகைப் பெற்றோர் நமது சமூகத்தில் உள்ளனர். ஒரு வகையினர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டுத் தமது பொறுப்பு முடிந்துவிட்டது எனக் கருதுவோர். இங்கு இவர்கள் சகல விடயங்களுக்கும் ஆசிரியரே பொறுப்பு எனக் கருதுகின்றனர். அடுத்த வகையினர் ஆசிரியர்களில் ஓரளவு நம்பிக்கை வைத்தும் சில சமயங்களில் நம்பிக்கையற்றும் காணப்படும் இவர்கள் பிள்ளையின் கல்வி பூரணத்துவத்துக்காக வெளிக்கல்வி நிறுவனங்களை நம்பி இருக்கின்றனர். இவர்கள் எப்போதும் ஆசிரியர்கள் மீது விழிப்பாக இருக்கின்றனர். இந்த விழிப்புணர்வு கல்வியில் சாதகமான, பாதகமான சூழ்நிலைகள் ஏற்பட வழியேற்படுத்தி விடுகின்றது. ஆசிரியர்கள் மீது சந்தேகம் கொண்ட இவர்களால் ஆசிரியர்களும் பாடசாலையும் பெரும் பழிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.

ஆசிரியர்கள் இயந்திரங்களல்ல. அவர்களும் மனிதர்கள். உணர்வுகளுக்கு அடிமைப்பட்டவர்கள். ஆசாபாசம், கோபதாபங்களுக்கு உட்பட்டவர்கள் என்பதைப் பல பெற்றோர்கள் உணரத் தவறுகின்றனர். தமது அடையமுடியாத ஆசைகளைக் குழந்தைகள் மீது திணித்துப் பாடசாலைக்கு அனுப்பும் இவர்கள் தமது குழந்தைகள் ஏற்கனவே கல்வியில் நாட்டம் அற்றவர்களாக ஆக்கப்பட்டவர்கள் என்பதை உணர்வதில்லை. அத்துடன் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதிலும் தாயும் தந்தையும் மாறிமாறி பிள்ளைகளைத் துன்புறுத்துகின்றனர். பிள்ளைகளுக்கு எவ்வித ஓய்வும் இன்றி பிரத்தியேக கல்வி நிலையங்களுக்கு அனுப்புவதும் கவலைக்குரிய விடயமாக உள்ளது. தமது குழந்தைகளை ஆசிரியரிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களின் பெறுபேற்றை மிகக் கவனத்துடன் சமூகம் எதிர்பார்க்கின்றது. இந்த நிலைப்பாடு இலங்கை உட்பட வளர்முக நாடுகள் அனைத்திலும் காணப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டும். பிள்ளைகள் பிள்ளைகளாகவே கற்றலில் ஈடுபடவேண்டும். ஆசிரியர்கள் பிள்ளைகளுக்காகவே போதனைகளில் ஈடுபடவேண்டும். பெற்றோருக்கான விழிப்புணர்வுகள் வளர்க்கப்பட வேண்டும். பெற்றோரிலும் ஆசிரியரிலும் பிள்ளை சுகம் காணவேண்டும். இதுவே பிள்ளையின் எதிர்கால வாழ்க்கைக்கான உளச்சுகமாகும் என்பது எனது கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியூடாக விழுமியக் கல்வி

M.H. நவாஸ் (விடுகை வருடம்)

''*மனித இனத்தின் வாக்குறுதியேகுழந்தை*''

-மொண்டி சூரி அம்மையார்-

மனித வாழ்வின் உயர் உழைப்பு எது என்பதை இக்கருத்து வெளிப்படுத்துகின்றது. ஒவ்வொரு மனிதனினதும் இலட்சியம் குழந்தைகளை நற்பிரஜைகளாக மாற்றுவதேயாகும்.

ஆசியாவின் பழைமை நாடுகளிலொன்றான எமது நாட்டில் பல்லினக் கலாச்சாரம் பேணப்படும் நிலையில் எமது வாழ்க்கை விழுமியங்கள் ஓம்பக் கூடியவாறு பல நூற்றாண்டுகளாகப் பேணப்பட்டு வந்தது. 1970 களின் பின்னர் இங்கு ஏற்பட்டு இன்றும் தொடர்கின்ற இளைஞர் அமைதியின்மை, இனங்களுக்கிடையேயான பிணக்குகள், வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களினால் விழுமியச் செயற்பாடுகள் சரிவடையத் தொடங்கின. இது எமது நாட்டு அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம் என்பவற்றில் பாரிய மறை தாக்கங்களை உருவாக்கியுள்ளது. இன்றைய செய்திகளில் அதிகளவு இடத்தைக் கொலை, கொள்ளை, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, வன்முறைகள் என்பன ஆக்கிரமித்துள்ளதைப் பார்க்கும் எவரும் எதிர்காலத்தையிட்டு கவலைப்படாமலிருக்க முடியாது. மாணவ சமுதாயத்திலும் இதன் மறைதாக்கம் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதை அவர்கள் மத்தியில் பரவலாகியுள்ள போதைப்பொருள் பாவனை, வன்முறைக் கலாச்சாரம் என்பன சுட்டிக் காட்டுகின்றன.

1978ஆம் ஆண்டு R.D. லெயீட் எனும் கல்வியியலாளரின் கூற்று இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டியுள்ளது. ''ஐக்கிய இராச்சியத்தில் இன்று பிறக்கும் ஒரு குழந்தை பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதிலும் 10 மடங்கு கூடுதலான வாய்ப்பை மன நோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவே கொண்டுள்ளது''.

மேலுள்ள கூற்றை ஆராயும் ஒவ்வொருவரும் எதிர்காலச் சந்ததியினரைப் பற்றி அதிக அக்கறை கொள்ள வேண்டிய கடமைப்பாட்டுக்குள்ளாகின்றனர். இயந்திர மயமாகிவரும் வாழ்க்கைப் போக்கில் ஒவ்வொரு மனிதனும் இயந்திரமாகவே மாறியதன் காரணமாக இளம் சந்ததியினருக்கு தாய் மடியில் இருந்து தொடங்கி பள்ளிக் கூடம்வரை புகட்டப்படவேண்டிய நல்லொழுக்கம், விழுமியங்கள் என்பன முறையாகக் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் போதியளவு வழங்கப்படவில்லை. இது விடயத்தில் வளர்ந்தோர் கவலைப்படவுமில்லை. இந்நிலையை உணர்ந்த முன்னாள் ஜனாதிபதி கௌரவ சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் தேசிய கல்வி ஆணைக்குழுவொன்றை நியமித்து கல்வியில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்களை ஆராய்ந்து நவீன உலகுக்கு எமது சமூகம் முகங்கொடுக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய கல்வித் திட்மொன்றை ஆக்குவதற்கு வழியமைத்தார். இத்தேசிய கல்வி ஆணைக்குழு விழுமியக் கல்வியைப் பொறுத்த வரையில் ''கலைத் திட்டத்தின் சகல அம்சங்களினூடாகவும் விழுமியக் கல்விக்கு முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும் குறிப்பாக சமய பாடத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்'' எனப் பரிந்துரை செய்தது.

சமயங்கள் யாவும் விழுமியக் கருத்துக்களின் பூங்காக்களாகக் காணப்படுகின்றன. சமயமொன்றை உறுதியாகக் கடைப்பிடிக்கும் ஒருவரின் வாழ்க்கையில் விழுமியங்கள் ஜொலிப்பாகக் காணப்படும்.

விழுமியக் கருத்துக்கள் சமயங்களினூடாகவும், சமயங்களுக்கப்பாலும் சந்ததியினருக்குக் கடத்தப்படுகின்றன. இருப்பினும் சமயங்களினூடாக அதிகளவு விழுமியங்கள் உறுதியாகப் பின்பற்றப்படுகின்றன.

மேற்கூறிய கருத்துக்களை ஆராயும் போது எமது நாட்டுப்பிரஜைகள் தமது சமயங்களை உரிய முறையில் பின்பற்றும் போது வாழ்க்கைக்கான விழுமியங்கள் அவர்களிடம் ஒன்றித்துவிடும் என்பது புலனாகின்றது.

பிரான்ஸின் தத்துவஞானி ரூசோவின் கருத்துப்படி ''மனிதன் கெட்டவனாகப் பிறப்பதில்லை. சமூகத்திலுள்ள ஊழல்கள் காரணமாகத்தான் கெட்டுப்போகின்றான். பாவங்கள் செய்கின்றான். நாகரீகம் அதிகமாக அதிகமாக மக்களின் கொடுஞ் செயல்களும் அதிகமாகிக் கொண்டே போகும். குழந்தைகளின் நற்சிந்தனைகளுக்கு வழியமைத்துக் கொடுத்தால் அதுவே சிறந்த கல்விக்கு வழிவகுக்கும்'' என்பதற்கமைவாக குழந்தைப் பருவத்திலேயே நற்சிந்தனைகளை வளர்த்துச் சிறந்த கல்விக்கு வழிகாட்டுமுகமாக 1998 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைவாக ஆரம்பக் கல்வியில் பல புதிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- ⌘ கட்டாய பாடமாக சமய பாடம் ஆக்கப்பட்டு வாரத்துக்கு இரண்டு மணி நேரம் கற்பிக்கப்படல்.
- ⌘ காலைக்கூட்டம் சமய அனுஷ்டானம் என்பவற்றுக்கு 75 நிமிடங்கள் வாரமொன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ளமை.
- ⌘ உடற்பயிற்சி நடவடிக்கைகளுக்காக 75 நிமிடங்கள் பயன்படுத்தப் படுகின்றமை.
- ⌘ விருப்புக் கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு வாரத்துக்கு 30 நிமிடங்கள் பயன்படுத்தப்படுகின்றமை.
- ⌘ இணைக் கலைத்திட்டம் தெரிவுசெய்யப்பட்டு அதற்காக 30 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமை.
- ⌘ ஒவ்வொரு பாடத்திற்குமான தேர்ச்சிகள் அடையாளப்படுத்தப்பட்டு அத்தேர்ச்சிகளை மாணவர் கட்டாயம் அடைதலை உறுதிப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களுக்காகப் பரிந்துரைக் கப்பட்டுள்ள விடயங்கள் செயல்படுத்தப்படும்போது அவர்களின் எதிர்கால வாழ்வுக்கான விழுமியங்கள் அவர்களிடம் ஒன்றித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. இதனூடாக கல்வியின் தேசிய குறிக்கோள்களான

- ⌘ தேசிய ஒருமைப்பாடு
- ⌘ வியாபகப்பாங்குடைய சமூக நீதி.
- ⌘ ஓம்பக் கூடிய வாழ்க்கைப் பாணி
- ⌘ ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்க வேண்டிய ஆழ்ந்த அக்கறையுணர்வு

என்பன விருத்தியடைந்து எதிர்காலம் சிறப்படையக் கூடிய வல்லமை பொருந்திய ஒரு சமுதாயம் உருவாகும் என்பது திண்ணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BACKWARD CHILDREN AND THE TEACHER

Mrs. Naslin Rifca Anzar (1st Year)

A Backward child is one who is educationally retarded though there is no marked deficiency in intelligence. A child who has become retarded due to intellectual deficiency is called educationally subnormal. The accepted definition for backwardness given by Burt is a child whose level of attainment is one grade below the expected grade for his age. If a child in grade 8 is unable to do grade 8 work and his attainment is equal to grade 7 he is called backward. A child may be backward in one or two subjects like Reading, Mathematics etc. or he may be backward in all the subjects. The latter is called general backwardness. About 15% of the school population is general backward.

**Why is a child backward?**

There are various reasons that are attributed for backwardness. A Physically deficient child may be backward because he cannot cope with the work in the classroom. Ill health may make him keep away from school. This will affect his learning experience.

Frequent absence from school may be another factor that contributes to backwardness. Ill health or truancy may make a child absent form the classroom.

Adverse environmental condition is another reason for backwardness. Most children in Sri Lanka schools are poor. They lack the basic essentials. They don't have the necessary books or even the basic implements. Most of them come hungry to school. Their homes lack facilities. They have no place to do their work at home. Parents show no interest in their school activities. Neither do they motivate them. Many homes are disturbed due to absent parents. drunken parents, divorced or separated parents.

**HOW TO HELP BACKWARD CHILDREN?**

There are conflicting views on the method of helping the backward child. Some argue that they connot be educated alongside other children. They point out that they should have special provision made in separate classes. In countries like England there are special centers for several schools



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to help the backward child. Some educational areas provide specially trained teachers who go round the school helping backward children.

In Sri Lanka we don't have facilities like that. The ordinary classroom teacher has to cope with the backward learner in the classroom. Sometimes special method and special curricular material has to be planned and used by the teacher himself. For a backward reader the teacher can use an easier reader or a reader used by children of a lower grade. When treating backward children, studying the needs of a particular individual is very importent. The teacher will have to study whether a child is backward generally or in a particular subject or in a few subjects. Remedial measures should be planned only after determining it.

A teacher should use a variety of mthods and materials as far as possible to stimulate the backward learner. Activities or methods that are child centered will appeal more to that type of child.

Always create a warm and accepting atmosphere in the classroom. Backward children are often unhappy because their experience of failures often. So the teacher should enable them some opportunity to succeed by giving them simple exercises or recognizing talents in areas like music, dancing, drama, or even leadership, A child who fails in a classroom can be made to feel wanted by entrusting simple duties like looking after the classroom, fetching the register etc.

Always be ready to provide help and guidance when necessary. The child should be made feel that the teacher is available when he is in need of help.

You have to teach backward children for short periods. A lesson for about 15 to 20 minutes should be enough to sustain an interest. The teacher has to teach thoroughly or overteach so that they learn the material completely. Avoid abstract learning by doing or concrete learning.

Always set clear and attainable objects so that he may not be disappointed. If the teacher has time, see that the child records his own progress on his own in some kinds of charts.

Teaching assignments can be graded to suit the needs of each child after studying the attainment level. The teacher himself can prepare a reader for each child or a book of exercises in mathematics. These can be given to the child to complete on his own.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானை முன்னிலைப்படுத்திய 5 "S"

திரு.பொ.ஜெகநாதன்(விடுகை வருடம்)

தற்போது இலங்கையில் உள்ள சில பாடசாலைகளைத் தெரிவுசெய்து ''ஜய்கா" (JICA) நிறுவனம் கல்வி முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இக்கல்வி நடவடிக்கையில் 5 "S" முறையும் பயன்படுத்தப்பட்டு வருவதை காணமுடிகிறது. எனவே 5 "S" என்றால் என்ன என்பதை முதலில் நாம் கவனிப்போம்.

1. செய்ரி (SEIRI) - தேர்ந்தெடுத்தல்
2. செய்ரோன் (SEITON) - ஒழுங்காக வைத்தல்
3. செய்சோ (SEISO) - தூய்மைப் படுத்தல்
4. செய்கெட்சு (SEIKETSU) - தரப்படுத்தல்
5. சிற்சுகே (SHITSUKE) - சுயகட்டுப்பாடு

இம்முறைகளை நாம் பாடசாலைகளில், காரியாலயங்களில் வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்துவதன் மூலம் பல வழிகளிலும் முன்னேற்றம் காண இடமுண்டு என்பதில் ஐயமில்லை.

பாடசாலையை எடுத்துக் கொண்டால் முதலில் அதிபர் அலுவலகம் பின்வரும் முறைகளில் காணப்பட வேண்டும்.

I. மாணவர், ஆசிரியர் தொடர்பான தரவுகள்
II. ஆவணங்கள் இலக்கமிட்டுப் பட்டியல்படுத்தப்படல் வேண்டும்.
III. பரீட்சைப் பெறுபெறுகள், வேறு தரவுகள் காட்சிப்படுத்தப் படல்வேண்டும்.
IV. தேவையான அட்டவணைகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

அடுத்து பாடசாலை வளாகத்தில் வாயில், மதில், பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில், கதவு என்பவற்றிற்குத் தீந்தை பூசி அழகுபடுத்துதல், வாயிற்கருகில் தளவரைபடம் வைக்கப்படல் வேண்டும்.

பிரதான கட்டிடங்களுக்கு பெயரிட்டு இலக்கமிடப்படல் வேண்டும்.

குடிநீர் சுத்தமாகவும் எந்த நேரமும் கிடைக்கக் கூடியதாகவும் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். சிந்தும் நீர் செல்வதற்கு வடிகால் அமைப்புச் செய்யப் படல்வேண்டும்.

மலசல கூடங்கள் எப்போதும் சுத்தமாகவும் பாவிக்கக் கூடிய நிலையிலும் இருத்தல் வேண்டும். ஆண்,பெண் என இருபாலாருக்கும் ஒதுக்கப்படல் வேண்டும்.

விளையாட்டு மைதானம், விளையாட்டு முற்றம் அடிக்கடி துப்பரவு செய்யப்பட்டு தேவையற்ற பொருட்கள் அகற்றப்படல் வேண்டும். தேவையான விளையாட்டு உபகரணங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

வகுப்பறை எப்போதும் சுத்தமாக இருத்தல் வேண்டும். தேவையான அட்டவணைகள் காட்சிப் படுத்தப்படல் வேண்டும். தளபாடங்களுக்கு தீந்தை பூசி கவர்ச்சியாக வைத்திருத்தல் வேண்டும்.

இம்முறைகளை நடைமுறைப்படுத்தினால், வினைத்திறன் மிக்க செயற்பாடுகளைக் குறுகிய நேரத்தில் செம்மையாக செய்து முடிக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

**கல்வியின் நான்கு தூண்கள் : (Four Pillars of Education)**

1. *அறிவைப் பெறக் கற்றல்*
   (Learning to know.)
2. *செயலில் ஈடுபடுவதற்காகக் கற்றல்*
   (Learning to Do)
3. *ஏனையவர்களுடன் வாழக் கற்றல்*
   (Learning to Live together)
4. *வாழக் கற்றல்*
   (Learning to be)

- *யுனஸ்கோவின் சர்வதேசக் கல்வி ஆணைக்குழு*
(Learning the Treasure within - 1996) *அறிக்கை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை முரண்பாடுகளிலிருந்து மீண்டெழச்செய்வதில் ஆசிரியரின் பங்கு

A. அஹமட் றமீஸ் (விடுகை வருடம்)

மனித வாழ்வு என்பது ஒருவரோடு ஒருவர் கொண்ட எதிரான சக்திகளின் போர்க்களம் எனவும் அங்கு நாகரீகம் இயல்பூக்கங்களோடு மோதும், சமூக இணக்கம் சமூக விரோதத்தோடு மோதும், தர்க்க ரீதியான விவேகம் தர்க்க ரீதியற்றதோடு மோதும் எனவும் உளவியலாளர் சிக்மன் பிராய்ட் விபரித்துள்ளார். முரண்பாடுகள் வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி எந்நிலையினரிலும் ஏற்படக் கூடியன. குடும்பம், பாடசாலை, வேலைத்தளம், சமூகம் என அவை விரிவடைந்து செல்கின்றன.

எரிக்புறொம் (Eric Fromm -1974) என்பவர் ''மனிதனில் முரண்பாடுகளின் காரணமாக இருவகையான வன்முறை இயல்புகள் உருவாகும்'' என்கிறார். ஒன்று விசமத்தனமற்ற வன்முறை இயல்பு, மற்றது விசம வன்முறை இயல்பு. முதலாவது வகையானது அப்பாவித்தனமானது. அதன் குறிக்கோள் ஆபத்தில் இருந்து விடுபடல் அல்லது தற்காப்பு ஆகும். இது மனித வர்க்கத்தின் நிலைப்பாட்டுக்குத் தேவையான இயல்பூக்கமாகும். இரண்டாவது வகையானது மானிட வர்க்கத்தின் அழிவுக்குக் காரணமாவது. இத்தகைய விசமத்தனங்கள் இன்று பெரும்பாலும் மாணவ சமுதாயத்தில் வேரோடத் தொடங்கியிருப்பதனால் அவற்றைக் களைய வேண்டியது அவசரமானதும் அவசியமானதுமாகும்.

இன்றைய மாணவ சமுதாயமே நாளைய சமுதாயத்தினதும் நாட்டினதும் வளர்ச்சிக்கு வித்திடுபவர்களாக இருப்பதனால் நல்ல மாணவ விதைகளை சமூகத்திற்கு உருவாக்கிக் கொடுப்பது இன்றைய ஆசிரியர்களின் பெருங் கடமையாக உள்ளது.

விலங்கியல் விஞ்ஞானியாகிய கொன்ராட் லோறன்ஸ் என்பவர் வன்முறைத் தன்மையைக் குறைக்கத்தக்க நான்கு வழிகளைக் கூறியுள்ளார்.

01. தன்னை உணர்தல், தன்னைப் பற்றிய நினைவோடு இருத்தல். பல்வேறு நடத்தைகளுக்காகத் தம்மை உள்ளூரச் செயற்படுத்துவன. உந்தல்கள், எழுச்சிகள், எண்ணங்கள், உணர்வுகள் என்பவற்றை இனங்கண்டு கொண்டால் முரண்பாடுகளைத் தவிர்க்கலாம்

02. வரைதல், இலக்கியம், நாடகம், விளையாட்டு போன்ற செயற்பாடுகள் வாயிலாக ஆழ்மன உந்தல்கள் மற்றும் எழுச்சிகளை விடுவிக்கலாம்.

03. குழுக்களிடையே, இனப்பிரிவுகளிடையே தோழமையை விருத்தி செய்வதால் சிறந்த சமாதான சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம்.

04. சமூகத்தில் மானிட முன்மாதிரிகள், எண்ணக் கருக்கள், உணர்வுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்புதலும் அவற்றின் மீது சமூகத்தைக் கட்டியெழுப்புதலும் ஆகும். இதற்குக் கல்வி மிகப் பிரதானமானதாகும்.

மேற்கூறப்பட்ட முரண்பாடுகளைத் தவிர்க்கும் அல்லது குறைக்கும் செயற்பாடுகளை மாணவர் மத்தியில் மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும். இதில் பெரும்பங்காற்ற வேண்டியவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியர்கள் பின்வரும் வகையிலான நடிபங்குகளை வகிப்பதன் மூலம் மாணவர்களில் பெரும்பாலானோரை முரண்பாடுகளில் இருந்து மீண்டெழச் செய்யமுடியும்.

**கற்பிப்பதைவிட கற்றலுக்கு உதவுபவராக செயற்படல்.**

நேரடியான பாடவிடயம், மனப்பாங்குகள், சிறப்புக்கள் என்பவற்றைக் கற்பிப்பதற்கு பதில் அவற்றைப் பிள்ளைகளில் இருந்து தோற்றுவித்துக்கொள்ள பல்வேறு செயற்பாடுகளைக் கருவியாகக் கொள்ளலும், சுதந்திரமான நிலையை ஏற்படுத்தலும், அவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்து ஒழுங்குபடுத்தி பின்னூட்டல் செய்வதும் சிறப்பானவையாகும்.

**ஜனனாயகவாதியாகச் செயற்படல் :**

சுதந்திரமான கருத்துக்களைப் பிள்ளைகள் வெளிப்படுத்தவும், அதிகமானவர்களின் விருப்பத்திற்கு அமைவாக முடிவுகளை மேற்கொள்ளவும் இடமளித்தல், பிள்ளைகளின் கருத்துக்களுக்கும் அவர்களின் அபிப்பிராயங்களுக்கும் மதிப்பளித்தல் சிறப்பானதாகும்.

**பிள்ளைகளின் கற்றல் திறன்களை நம்பிக்கையோடு நோக்குபவராக செயற்படல்**

பிள்ளைகள் வெற்றுப் பாத்திரங்கள் அல்லர். பொருத்தமான ஆர்வத்தை உருவாக்கினால் அவர்களுக்குத் தம்மில் நம்பிக்கை ஏற்படும். ஆசிரியர் மாணவர்களைத் தூண்டுபவராகவும் வழிகாட்டுபவராகவும் செயற்படுதல் சிறப்பானது.

**உலகளாவிய கண்ணோட்டத்துடன் மானிடப் பிரச்சினையை நோக்குபவராகச் செயற்படல் :**

ஆசிரியர் உலகளாவிய தொடர்பை தாம் கற்பிக்கும்போது எந்தவொரு பாடத்தின் வாயிலாகவும் வெளிப்படுத்திக் காண்பிக்கும் திறன் படைத்தவராக செயற்படுதல் அவசியமாகின்றது. இவ்வாறு பாடத்தை நடத்திச் செல்வதால் பிள்ளைகளைக் குறுகிய வர்க்கம், மொழி, இனம் போன்ற வேறுபாடுகளுக்கு ஆளாகாது தடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனிநர் அபிவிருத்தியளாளனாக செயற்படல் :**

தனிநபர் அபிவிருத்தி என்ற எண்ணக்கருவை மாணவர்களில் கட்டியெழுப் புவதும், அதன் வாயிலாகத் தெளிவான தனித்துவத்தை உருவாக்கிக் கொள்வதும், அதனோடு சார்ந்த தமது வெகுசனத் தொடர்பு நிலைப்பாடு, விமர்சனப் பாங்கு ஆகிய தனிநபர் திறன்களைக் கூர்மையாக்கிக் கொள்வதும் சிறப்பானதாகும். இதனால் அவர்களின் ஆளுமை விருத்தியடைய வாய்ப்புண்டாகும்.

**தொழிலுக்கான வழிகாட்டியாக செயற்படல் :**

வேலையற்ற பட்டதாரிகள் கூட முரண்பாடு காரணமாக வன்முறைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் இன்று பரவலாக அதிகரித்து வருகின்றன. இதற்குக் காரணம் தொழிலுக்கான கல்வி வழங்கப்படாமையாகும். மாணவர்களின் கற்றல் தொழில் நோக்கம் கருதியதாக அமையுமாயின் எதிர் காலத்தில் அவர்கள் விரக்தி மனப்பான்மையில் இருந்து விடுபடமுடியும். ஆதலால் மாணவர்களின் பாடத்தெரிவானது கற்று முடிந்ததும் வேலையுலகில் பிரவேசிப்பதற்கான படிக்கல்லாக அமைவதற்கு ஆசிரியர் வழிகாட்டுவது அவசியமாகும்.

நிறைவாக முரண்பாடுகள் வன்முறைகளைத் தோற்றுவிக்கும் காரணிகளாக இருப்பதனால் அவற்றிலிருந்து சிறுவர்களை மீண்டெழச்செய்வது பெரியோர்களது கடமையாக உள்ளது. சிறுவர்களின் கட்டாயக் கல்வி முறையானது பாடசாலைகளில் அவர்களை ஒன்று கூடச்செய்கின்றது. மாணவர்களை வழிநடத்துவதற்கேற்ற களமாக பாடசாலைகள் அமைவதால் முரண்பாடுகளில் இருந்து அவர்களை மீண்டெழச் செய்வது சாத்தியமாகின்றது. தற்போது பாடசாலைகளில் ''வழிகாட்டல் ஆலோசனை வழங்கல்'' சேவை ஆரம்பிக்கப்பட்டமை சிறந்த திட்டமாகும். ஆனால் இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவற்கு ''உளவளத் துணை'' பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அவசியமாகும். இதற்காக கல்வியமைச்சின் கீழ் உளவளத்துணைப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

செயற்பாடுகள் மூலம் கற்பதற்கு வாய்ப்பளியுங்கள்.
செயற்பாடுகள் மூலம் மாத்திரம் கற்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் சொற்களைப் பயன்படுத்துங்கள்.
- ரூசோ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் கற்பித்தலை இலகுபடுத்தும் குழுச் செயற்பாடு

திருமதி. க. தயாசீலன் (விடுகை வருடம்)

ஒரு வேலையைக் குழுவாகச் சேர்ந்து செய்வது பண்டைய காலத்திலிருந்து வந்த முறையாகும். அதனை அவர்கள் ஆடல் பாடல்களுடன் மகிழ்வாகச் செய்தனர். இதனால் வேலையின் கடினம் இலகுவாக்கப்பட்டது. தற்காலத்திலும் குழு வேலைகள் நடைமுறையில் உள்ளன. எனினும் குழு வேலைகள் கொடுக்கப்படும்போது பொதுவாகத் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் தாம் மாத்திரம் பாடுபட்டு குழுவின் வேலையை முடிக்கவும், ஏனையோர் குழுவேலையை உதாசீனம் செய்வதும் பரவலாக நாம் காணும் சம்பவங்கள். இதனால் தலைமைப் பொறுப்பை ஏற்க அனேகர் விரும்புவதில்லை. இதனால் பொருத்தமற்றவர்கள், பொறுப்பற்றவர்கள் எளிதாகத் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் திறமையற்ற வகையில் வேலைகள் நடைபெறுவது சகஜமாகிவிட்டது.

எனவே, கூட்டு முயற்சி, கூட்டுப்பொறுப்பு என்பன வலுவூட்டப்பட வேண்டும். இதுவரைகாலமும் விடுபட்ட இடைவெளிகளை நிரப்புவது அவசியம். குழுவைக் கட்டியெழுப்பிக் கொண்டு செல்ல தலைமைத்துவம் அவசியமாகிறது.

குழுச் செயற்பாடு, குழுவேலை புதிய கல்வித் திட்டத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அமைந்துள்ளது. பொதுவாக ஆரம்ப வகுப்பு மாணவர் தான் எல்லாவற்றையும் செய்யவேண்டும் தன்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்ற எண்ணமுள்ளோர் தனியாக யாவற்றையும் அனுபவிக்க விரும்புவார். கூடிசெயற்பட விரும்புவர், மற்றவர் தன்னைப் பற்றிச் சிறப்பாக எண்ண வேண்டுமெனச் செயற்படுவர். பௌதிக விடயங்களில் பிரச்சினைகளைத் தீர்ப்பர்.

இவர்களை வகுப்பறையில் குழுவாக வேலைசெய்ய ஆர்வமுடையவர்களாக மாற்ற வேண்டும். நடைமுறையில் உள்ள வயதான பிள்ளைகளுடன் கூட்டுறவாக வேலைசெய்யும் குழுச்செயற்பாடு எனும் குழுவேலை, வயதான பிள்ளைகளுடன் கூட்டுறவாக வேலைசெய்வதற்குரிய திறன்களை விருத்தி செய்வதற்கான ஏற்பாடு. அத்துடன் வயாதான பிள்ளைகள் தலைமைத்துவப் பண்புகளையும் பெறுகின்றனர். இவ்வேற்பாட்டினால் இரு குழுவினரும் இத்திறன்களைப் பெறுகின்றனர். குழுக்களிடையில் காணப்படும் போட்டி மனப்பான்மை குழுச்செயற்பாட்டை வலுவாக்குகிறது. தலைமைத்துவத்திற்குரிய மொழித் தேர்ச்சி, குழுவேலையின் போது பயன்படுத்தும் மொழி நடை, தமது வளங்களைப் பாதுகாத்தல், சுய கட்டுப்பாடு, பொறுப்பேற்றல், கடமையை உணர்ந்து கொள்ளல், நாகரிகமாக நடத்தல், முற்போக்காக வாழ்தல், பொறுமை, கிடைத்தவற்றைத் தமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமென அமுக்கி வைக்காது பொதுவாகப் பயன்டுத்தல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஆரம்ப வகுப்புகளுக்கான கற்பித்தல் நுட்பம் முதன்மை நிலை 1 இல் திட்டமிட்ட விளையாட்டுக்களும் செயற்பாடுகளும் எழுத்து வேலைகளைவிட அதிகமாகக் காணப்படும். முதன்மை நிலை 2 இல் இவை ஒவ்வொன்றும் சம அளவாகக் காணப்படும். முதன்மை நிலை 3க்கு வரும்போது எழுத்து வேலைகள் திட்டமிட்ட விளையாட்டு செயற்பாடுகளை விட அதிகமாகக் காணப்படும். 5ம் தரத்தில் அமர்ந்திருந்து அதிக எழுத்து வேலைகளைச் செய்ய முதன்மைநிலை 1 இலும் 2 இலும் கொடுக்கப்படும் திட்டமிட்ட விளையாட்டுக்களும் குழுச் செயற்பாடுகளும் வழிவகுக்க வேண்டும். திட்டமிட்ட விளையாட்டு எனும் போது மாணவர் இதனை விளையாட்டு என நினைத்து ஈடுபடுவர். ஆயினும் ஆசிரியரைப் பொறுத்தவரையில் இது விளையாட்டு முறைக் கற்பித்தலாகும். மிகக் கவனமாகத் திட்டமிட்டு வழிப்படுத்தாவிடின் எதேச்சையான விளையாட்டாக மாறிவிடும். தனியாகவும் குழுவாகவும் விளையாட்டு முறையில் மாணவர் கற்க வேண்டும் என்பதே முக்கியம். இவ்வகையில் குழுச் செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

நடைமுறைப் பிரச்சினை பல இருப்பினும் இயலுமான வரை அவற்றைத் தீர்த்துக்கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட குழுச்செயற்பாடுகளைச் செயற்படுத்தி பொறுப்புணர்ச்சியுடைய சமூகத்தை உருவாக்குவோம்.

கல்வி பயனுடையதாக வேண்டுமாயின்
அது மாணவனின் கவர்ச்சிகள்,உளச்சார்புகள்,
உள்ளார்ந்த ஆற்றல்கள் ஆகியவற்றின்
அடிப்படையில் அமைதல் வேண்டும்.
*- பெஸ்டலோசி -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை மீளக் கட்டியெழுப்புவோம்

கே. திருநாமம் (விடுகை வருடம்)

எமது நாடு இந்து சமுத்திரத்தில் இலங்குகின்ற ஒரு சிறிய தீவு. இது குபேரன் இராவனேஸ்வரன் ஆண்ட சிறப்பு மிக்கது. ஒரு காலத்தில் இலங்கையிலுள்ள விலை உயர்ந்த மாணிக்கக்கல் ஒன்றைத் தனக்குத் தருமாறும் அதற்கு சீனாவின் ஒரு பகுதியைத் தருவதாகவும் சீன மன்னன் கூப்பிளைக்கான் தூதனுப்பிய வரலாற்றை நாம் பார்க்கின்றோம். இங்கு மண்வளமும், மலை வளமும், நதிவளமும், கடல் வளமும், வனவளமும், முத்து, மாணிக்கம், யானைத் தந்தம், வாசனைத் திரவியங்கள் போன்றவையும் சிறந்து விளங்குகின்றன. இந்தப் புனித மண்ணில் சிவனொளி பாதமலை, கதிர்காமம், நல்லூர்க் கந்தன் ஆலயம், நயினை நாகபூசணி, வற்றாப்பளைக் கண்ணகி, மடுமாதா திருத்தலம், கேதீச்சரம், கோணேச்சரம், தலதா மாளிகை, மிகுந்தலை, அனுராதபுரம், சிகிரியா, பொலனறுவை, ஜெயிலானி, அமிர்தகளி, மாமாங்கம் என்று புகழ் பூத்த இடங்கள் எம்மவரின் உள்ளத்தையும் உணர்வுகளையும் கொள்ளை கொண்டிருந்தன. இதனால் உறவுகள் தொடர்கதையாய் உலா வந்தது. கால மாற்றங்களும் அன்னியர் வருகை போன்றவற்றால் பிரித்தாளும் தந்திரமும் எமது நாட்டை ஓரளவு சின்னா பின்னமாக்கியது. அது மெல்ல நகர்ந்து 1948 ல் சுதந்திரத்தின் பின் உறவுகள் உணர்வுகள் சற்று மதிக்கப்படாது விட்டதன் காரணமாகச் சமாதானம் என்ற வெண் திரையில் பல சிறு கறுத்தப் புள்ளிகள் விழத் தொடங்கின. ஆங்கிலக் கல்வியைக் கற்று கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்து நின்றோருக்கான கல்வி வாய்ப்புக்கள் CWWகன்னங்கராவின் இலவசக் கல்வி, தாய் மொழியில் ஆரம்பம் முதல் பல்கலைக்கழகம் வரை பெறக் கூடியதான தன்மை வியாபகமடைந்தது.

இவ்வாறு கல்வியில், விவசாயச் செய்கையில், நகர அபிவிருத்தியில், தொழில் வாய்ப்புகளில் 'கூடி வாழ்தல் கோடி நன்மை" என்பதற்கொப்ப வாழ்ந்த மக்களிடையே மெல்ல நகர்ந்த விரிசல் இன்று பூதாகரமாக போர் மேகங்கள் இடிமுழக்கத்துடன் பாரிய மின்னல்களைப் பாய்ச்சியது போல் தமிழர் என்றும், சிங்களவர் என்றும் பிரிவில்லாது கூடி வாழ்ந்தோர் இனவெறியால், மொழி வெறியால், மத வெறியால் மோதி முட்டி மண்டைகளை உடைத்து உப்புச் சத்தியாக்கிரகம், பாதயாத்திரைகள், ஊர்வலங்கள், குண்டாந்தடிப் பிரயோகம் என்று நகர்ந்து இன்று பெரிய நாடுகள் முட்டி மோதிக் கொள்வது போல், குண்டு வீச்சுக்கள், மனிதக் குண்டுகள், கண்ணி வெடி, செல்வீச்சுக்கள், விமானக் குண்டு வீச்சுக்கள், நகர அழிப்பு, குடிமனை விவசாய நிலங்கள் அழிப்பு என்று யார் பூனைக்கு மணிகட்டுவது என்று போராடிப் போராடி உலக நாட்டில் கடனை அள்ளி அள்ளிப் பெற்று நாட்டைச் சுடுகாடாக மாற்றியதோடு மக்களின் மனங்களையும் இன, மத வெறியால் இறுக வைத்திருந்த வேளை அந்நிய நாட்டின் தலையீட்டால் போர் நிறுத்தம், சமாதானப் பேச்சு என்று நீண்டதோர் முடிவற்ற புரிந்துணர்வற்ற பிரயாணத்தில் அரசியலாரும், புலிகளும் சென்று கொண்டு எங்கே நிற்பது யார் நிறுத்துவது என்று நினைக்கின்ற வேளையில் இயற்கையன்னை தன் சிறகை இலங்கை மீது சில நிமிடங்கள் விரித்து நின்றாள்.

மனிதன் இறைவனை மதியாது அறத்தை மறந்து அதர்மத்தை தலையில் சுமந்து சிங்கார பவனி வருவதைத் தடுக்க சுனாமி என்ற ஆழிப் பேரலையின் தாக்கம் மதங்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை வதைசெய்ய இறைவன் ''துக்க நிக்கிரக சிஷ்டபரிபாலனம்'' செய்வது போல் கடலோரத்தில் ஒரு கிலோ மீற்றருக்கு மேலான பிரதேசத்தை அழித்து ஒழித்தது. இதனால் மாடி, மனைகள், கூட கோபுரங்கள் முதல் சிறு மண் குடிசை வரை இடிந்து கடலில் தஞ்சம் புகுந்தன. மக்கள் உயிர்களை உறவுகளை உடமைகளை இழந்து சிதறிச் சின்னாபின்னமாகி அநாதைகளாக அகதிகளாகப் பாதுகாப்புத் தேடி புனர்வாழ்வு நிலையங்களில் தஞ்சம் புகுந்து இன்னும் அந்த அவல வாழ்வை விட்டு அகல முடியாத நிலையிலேயே உள்ளார்கள். அவர்கள் படும் துன்பங்களும், துயரங்களும் சொல்ல முடியாதவை. சொல்லிலடங்காத நிலையே இன்று காணப்படுகின்றது. சுனாமியினால் பாதிப்புற்ற உறவுகளை மனித நேயத்தோடு சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் என்ற பேதங்களை மறந்து நமது ஸ்ரீலங்காவின் மண்ணின் மைந்தர்கள் வதைக்கப்பட்டுள்ளனர் என்ற உணர்வோடு உணவும், உடையும், ஏனைய பொருட்களும் ஏற்றிய வாகன அணிகள் பாதிப்புற்ற மக்களை நாடி வந்து சேவை செய்து ஆதரித்து அரவணைத்த தன்மையினை நாம் என்றும் எப்போதும் மறந்துவிடலாகாது.

எமது இந்த நாட்டின் மக்கள் படும் வேதனையைக் கண்ணுற்ற அனைத்து நாடுகளும் தமது உதவிகளையும் சேவைகளையும், வைத்திய உதவிகளையும், குடிமனைகள் அமைத்துக் கொடுக்கின்ற பணிகளையும், இயந்திர சாதனங்களின் உதவியில் சுத்திகரிப்புப் பணிகளையும் ஆலோசனைச் சேவைகளையும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றது. தவிக்கவிட்ட சுனாமி இந்நாட்டின் விடிவுக்கான தங்கச் சுனாமியாக மாறிவிட்ட நிலையும் இன்று காணப்படுகின்றது. காலில் அணிவதற்குக் காலணி இல்லாது தவித்த கரையோரப் பாடசாலை சிறார்கள் இன்று இரண்டு மூன்று சப்பாத்துக்களை மாறிமாறி அணிகின்ற நிலையினைக் கூட நாம் காணுகின்றோம். இன்று நாம் காணும் இந்த நிலை படிப்படியாக உயர்ந்து அன்று கண்ட குபேர தீவாக எம் நாட்டை உயர்த்த இந்தச் சந்தர்ப்பத்தில் திடசங்கற்பம் பூண வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். வேண்டாம் இந்தச் சீரழிந்த வாழ்க்கை இனி ஒரு புது உலகை நாம் நமது முயற்சியாலும் அந்நிய நாட்டின் உதவியாலும் உருப்பெறச் செய்வோம் என்ற உயரிய நோக்கத்தோடு நாமனைவருங் கைகோர்த்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். கிடைக்கின்ற நிதியினைத் தனியொருவர் சுருட்டிக் கொள்ளாது அதனைப் பலருக்கும் பயன்படத் தக்கதாக வாய்ப்பளித்து சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஏன் ஒரு நவீன ஜப்பானாக எமது நாட்டை கட்டியெழுப்ப நாம் அனைவரும் விடாமுயற்சியுடனும் தெய்வ நம்பிக்கையுடனும் விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையுடனும் புரிந்துணர்வுடனும் இன, மத பேதங்களை மறந்து ஒன்றுபட்டு ஒரு தாய் வயிற்றில் ஒரு உதிரத்தில் உதித்த உடன் பிறப்புக்கள் போன்று ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டியதும் காலம் எமக்குக் கற்றுத் தந்த பாடமாகும்.

எமது நாடு பாரம்பரியமாக விவசாயத்தை மேற்கொண்டு வந்த நாடு அத்துடன் தேயிலை, றப்பர், தெங்கு என்று பல்வேறு ஏற்றுமதிப் பயிர்களும் எமது நாட்டில் சிறப்பாகப் பயிரிடப்படுகின்றன. இவற்றை நவீன விஞ்ஞான முறைகளைப் புகுத்தி விளைவினை அதிகரித்து அதன் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்வதற்கு நாமனைவரும் முன்வர வேண்டும். இப்பயிர்கள் அடிக்கடி பாதிக்கப்படுவதை நாம் காண்கின்றோம். அவற்றை நோயியல் ஆய்வு நிபுணர்கள் மூலம் உடனுக்குடன் பயிர் செய்யப்படும் இடங்களிலேயே ஆய்வு நிலையங்களை நிறுவி ஆய்வு செய்து விளைவை அதிகரிப்பதுடன் அதற்கான சந்தை வாய்ப்புக்களையும் சர்வதேச மட்டத்தில் அதிகரிக்கச் செய்ய வேண்டும். ''மழையாகப் பொழியும் ஒரு துளி நீர் தானும் கடலைச் சென்றடையாது பயன்படுத்தப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்" என்று கூறி பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டுவித்து விவசாய அபிவிருத்தியின் உயர்வுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தான் பராக்கிரமபாகு மன்னன் என்பதை நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். அதற்காக நமது நாட்டில் தரிசாகக் கிடக்கும் விவசாய விளைநிலங்களை பொன் கொளிக்கும் பூமியாக மாற்றச் செய்வோமாயின் எம் நாடு தன்னிறைவடைவது திண்ணம். சர்வதேச முதலீட்டாளர்களையும் இதில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் போரால், சுனாமியால் பாதிப்புற்ற எமது சிறார்களின் கல்வியை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் உதவியுடன் உலக மயமாக்கத்தோடு ஒத்துச் செல்லக் கூடிய கல்வியாக மாற்ற வேண்டும். நவீன விஞ்ஞான தகவல் தொழில் நுட்பம் இணைக்கப்பட்டதாகவும் இலங்கையின் மூலை முடுக்குகள் எங்கும் உள்ள மாணவர்களுக்கு கல்வி தாராளமாகச் சென்றடையக் கூடியதாகவும் திட்டமிட்டு செயன்முறையோடு கூடியதாக வழங்கப்பட வேண்டும். தொடர்பாடலை விருத்தி செய்வதற்காக கணனி மயப்படுத்தப்பட்ட கல்வி ஆங்கில மொழித் தேர்ச்சி என்பன வழங்கப்பட வேண்டும். வேலை உலகுக்குத் தயாரான எதிர்கால சமுகத்தை உருவாக்கும் பயனுறுதிமிக்க நிலையங்களாக பாடசாலைகள் திகழ வேண்டும். அதற்கான ஆசிரிய ஆளணி மலேசியா, இஸ்ரவேல் போன்ற நாடுகளைப் போன்று இஸ்திரப்படுத்தப்பட வேண்டும். அதற்கான ஊதியமும் வழங்கப்பட வேண்டும். நவீன கல்வி நுட்பம் ஈமெயில், இன்ரநெட், என்று விரிவடைந்து செல்வதற்கேற்ப உதவி வழங்கும் அயல் நாடுகளின் உதவியைப் பெற்று நாம் எமது மாணவர்களின் ஆளுமை ஆற்றல்களை விருத்தி செய்வோமாகில் எமது நாட்டிலும் கல்வியில் மேலோங்கிய நிபுணத்துவம் வாய்ந்த இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் போன்ற ஆய்வாளர்களை உருவாக்க முடியும். புதிய புதிய கண்டுபிடிப்புக்களும் எமது நாட்டில் மேற்கொள்ள முடியும். வெளிநாடுகளின் ஒத்துழைப்பு ஆலோசனை ஒழுங்கமைப்பு மேற்பார்வை போன்றன எமது நாட்டுக்கு வெற்றியைத் தேடித்தரும். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் கணனியைத் தொட்டுப் பார்க்க வாய்ப்பில்லாத எமது பாடசாலை மாணவர்கள் உலக வங்கி போன்றவற்றின் உதவியுடன் ஏன் சுனாமியின் பின் நாட்டுக்கு வருகைதந்த பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் நவீன கணனிகளையும், இன்ரநெற், ஈமெயில், தொலைக்காட்சிகள் என்று எத்தனையோ நவீன சாதனங்களைப் பெற்றுக் கொண்டு கல்வித் துறையை அபிவிருத்தி மிக்கதாக மாற்றும் பணியில் முன்னேறியுள்ளோம் என்பதை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது,

சுகாதார வைத்தியசாலைகளை எடுத்து நோக்கினால் கடந்த காலங்களில் எமது நாட்டில் உள்ள வைத்திய நிபுணத்துவம் வாய்ந்த மேதைகள் வெளிநாடுகளை நோக்கி மின்னல் வேகத்தில் நகர்ந்தனர். ஆனால் இன்று வெளிநாட்டில் உள்ள நிபுணத்துவம் மிக்க வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் எமதுநாட்டுக்கு வருகை தருகின்றனர். ஆய்வுகளை நடாத்துகின்றனர். இதே போல் பொறியியலாளர்களின் வெளியேற்றமும் இன்று தடைப்பட்டுள்ளது. நவீன கட்டுமானப் பணிகள் இங்கு மேற்கொள்ளப்படுவதாலும் உயர்ந்த ஊதியம் வழங்கப்படுவதாலும் அவர்கள் அர்ப்பணிப்பு சிந்தையுடன் எமதுநாட்டில் தமது பணியை மேற்கொள்ள வாய்ப்பேற்பட்டுள்ளது. உலகின் பல பாகங்களில் இருந்தும் வந்துள்ள பொறியியல் நிபுணர்கள் நவீன தொழில் நுட்பச் சாதனங்களின் உதவியாலும் நவீன இயந்திர தொழில்நுட்ப சாதனங்களின் உதவியோடும் இன்று எமது நாட்டை ஓர் சிங்கப்பூராக ஆக்குவதற்குத் திடசங்கற்பம் பூண்டு நிற்பதனைக் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாடு உல்லாசப் பயணிகள் வருடந்தோறும் பெருந் தொகையானோர் வந்து செல்லுகின்ற சொர்க்க புரியாகத் திகழ்கின்றது. இதனை அபிவிருத்தி செய்வதற்குப் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் கரையோரப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நவீன மரநடுகைத் திட்டங்களை அமுல் படுத்தியுள்ளன. இதில் அவர்களுடன் இணைந்து நாங்களும் கைகோர்த்து காத்திரமான இயற்கைச் சூழலை உருவாக்க வேண்டும். இனியொரு சுனாமி வந்தால் கடலோரப் பாதுகாப்பு வலயத்தை இயற்கை அரணான மர நடுகைத் திட்டம் தடுத்து விடுமல்லவா. சுனாமிக்கெதிரான கரையோரக் கட்டுமானப் பணிகளுடனான உல்லாசப் பிரயாணத் துறை விடுதிகள் அமைக்கும் போது எமது நாடு வளம் கொழிக்கும் .

சுத்தம், சுகாதாரம் நிறைந்த நாடாக எமது நாட்டை நாம் உருவாக்க வேண்டும். இன்று அயல் நாடுகளின் உதவி எமக்குத் தாராளமாகக் கிடைக்கின்றது. அவற்றைக் கொண்டு குப்பை கூளமற்ற அழகான உலகை நாம் படைக்க வேண்டும். எமது நாட்டில்தான் எங்கு பார்த்தாலும் குப்பைகளும், கூளங்களும் நிறைந்து காணப்படுகின்றன. அயல் நாடுகளான மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்கு குப்பை கூளங்களை நகரிலோ ஏனைய இடங்களிலோ நாம் காண முடியாது. ஆகவே சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதற்கான சுற்றாடல் பாதுகாப்பு இறுக்கமான சட்டங்கள் தீட்டப்படவேண்டும். அத்துடன் பாடசாலையில் கற்கும் சின்னஞ்சிறார்களிடம் நாட்டுப் பற்றுள்ள இந்தப் பணியை நாம் விதைக்க வேண்டும். தூய்மையான உலகைக் கண்டு களிக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுக்க வேண்டும். குப்பைகள் அனைத்தும் மீண்டும் கூட்டுடெருவாகப் பயன்படுத்தும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். பொலித்தீன் பாவனை மட்டுப்படுத்தப்பட வேண்டும். இதனை அன்னிய நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டும். சிறந்த வடிகால் அமைப்புக்களை எமது நகர அமைப்புக்களில் திட்டமிடப்பட வேண்டும் எங்கும் எதிலும் புனிதம் திகழ வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இனவாத, மதவாத பிற்போக்கான அரசியல் நிலை இந்த நாட்டில் வேரோடு அழிக்கப்பட்டு புனித மதங்கள் கூறும் பொன்னான ''மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற வாழ்க்கைப் பாங்கு சீரமைக்கப்பட வேண்டும். ஆயுத கலாசாரம் இந்நாட்டில் ஒழிந்து மனித நேயமும் சமாதான உணர்வும் மனிதனை மனிதனாக மதிக்கின்ற பண்பும், அயலவரின் மதங்களையும் அயலவரின் கலாசார விழுமியங்களையும் வணக்கஸ் தலங்களையும் மதித்து மரியாதை செய்யும் மனப்பாங்கும் உதயமாக வேண்டும். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற உயர் சிந்தனையும் நாம் ஸ்ரீலங்கா மாதா ஈன்றெடுத்த தவப் புதல்வர்கள் என்ற உணர்வோடும் வெளிநாட்டின் நிறைவான உதவிகளைப் பெற்று மீண்டும் ஒரு இரத்தினத் துவீபமாக எமது நாட்டை உருவாக்க வேண்டும். மலேசியாவின் மகிதீர் முகம்மட் போன்ற அரசியல் தேசப்பற்றுள்ள தலைமைத்துவம் எமது நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதே எமது நாடு சாந்தியும், சமாதானமும் அபிவிருத்தியும் கண்ட நாடாகவும், வெளிநாட்டின் பங்களிப்பை 100% பயன்படுத்திய நாடாகவும் சொர்க்க பூமியாகவும் திகழும் என்பது திண்ணம்.

*''வாழ்க எமது நாடு, வளம் பல பெருக"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FIRTS YEAR STUDENT TEACHERS

BEd. 2004 / 2006 (Primary)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கித் தலை குனிகின்றேன்

திரு. W.E. அருள் நேசன்(விடுகை வருடம்)

பட்டமொன்று பெற வேண்டும்
பதவி உயர்வுக்கும்,
படி (சம்பளம்) உயர்வுக்கும்.
அது உதவுமென்று அன்று நான் நினைத்தது
தவறென்று இன்று நான் உணர்கின்றேன்.

மூன்று வருட கற்கை நெறியில்
முழு மூச்சாய்த் தேடிக் கற்றதனால்
''முயற்சி திருவினையாக்கும்'' என நம்
முன்னோர்கள் சொன்னதெல்லாம்
'கல்வி மாணி' பட்டம் ஒன்று
கையில் கிடைக்கும் போது
நிச்சயமாய் நான்
களிப்படைய மாட்டேனோ?

ஆனால்,
''அதை விட உயர்ந்த 'அறிவை'
ஆசிரியர் வாண்மை தன்னை
இன்று நான் பெற்று விட்டேன்''
என நான் எண்ணும் போது
வெட்கித்து தலை குனிகின்றேன்.
''அறிவுக்கு'' பின்னேதான் ''பட்டமும் பதவியும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாடல்

கே. தயானந்தன்(விடுகை வருடம்)

துள்ளித் துள்ளிப் பள்ளி செல்லும் சின்னஞ் சிறுவர்களே!
வெள்ளை வெள்ளை உள்ளம் கொண்ட சின்னஞ் சிறுவர்களே!!
அள்ளி அள்ளிக் கல்வித் தேனைச் சின்னஞ் சிறுவர்களே!!!
அருந்தி அருந்தி உயர வேண்டும் சின்னஞ் சிறுவர்களே!!!!

அம்மா அப்பா வீட்டிலிருந்து சின்னஞ் சிறுவர்களே!
இம்மா நிலத்தில் உயர்ந்த கனவு சின்னஞ் சிறுவர்களே!!
